Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :194 வைகாசி 28ஆம் நாள் புதன்கிழமை 10 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



வரணி கோவிலில்

## கலசம் உள்ளிட்ட பொருள்கள் திருட்டு

கொடிகாமம், ஜூன் 10

வரணிவடக்குதம்பான்கும்பிட்டான்புல பிள்ளையார் கோவிலில் இருந்த ஐம் பொன் கலசம் உட்பட ஆறு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற் றும் 40 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக் கப்பட்டது.

12

79 லட்சத்தை கொள்ளையடித்த

## மருத்துவர் துரத்திப் பிடிப்பு

கொழும்பு, ஜூன் 10

கொழும்பு தேசிய மருத்துவம னையில் விளையாட்டுத் துப் பாக்கியை காட்டி 79 லட்சம் ரூபா பணத்தை கொள்ளை யிட்டு தப்பியோடினார் என்ற குற்றச்சாட்டில் பணத்துடன் மருத்துவர் கைது

12

## சகல பாடசாலைகளும் ஜூன் 29 இல் ஆரம்பம்!

வகுப்பு நேரங்களில் மாற்றம்

ஏ.எல். பரீட்சை செப். 2 –ஒக். 2 வரை

புலமைப்பரிசில் பரீட்சை செப். 13

கொழும்பு, ஜூன் 10

கொரோனா வைரஸ் பரவ லையடுத்து மார்ச் மாதம் 13ஆம் திகதி மூடப்பட்ட பாடசாலைகள் சுமார் மூன் றரை மாத இடைவெளி யின் பின்னர், எதிர்வரும் 29 ஆம் திகதி மீளத் திறக் கப்படவுள்ளன. அதன் பின்னர் நான்கு

15

# முன்னாள் போராளிகளே ஒன்றிணையுங்கள்

மாவை. சேனாதிராசா கோரிக்கை



வவுனியா, ஜூன் 10

விடுதலைப் புலிகள் என்ற பெயரில் இயங்கும் கட்சிகளைச் சேர்ந்தோர், அமைப்புகளைச் சேர்ந்தோர் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். அதன் மூலம் ஒரு பொதுவேலைத்திட்டத்தை நோக்கி செயற்படவேண்டிய எதிர்காலத்தைக் கொண்டிருக் கவேண்டும். அது முக்கியமானது.

15

## கோத்தாவின் செயலணிக்கு மன்னிப்புச் சபை போர்க்கொடி

ஐ.நாவுக்கு அறிக்கையும் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 10

கிழக்கிலங்கையில் தொல் பொருள் வளங்களைப் பாது காப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய நியமித்துள்ள செயலணி சிங்கள பௌத்த தேசிய நிகழ்ச்சி நிரலை முன் னெடுப்பதற்குப் பயன்படுத் தப்படும் என்ற அச்சம் வெளியாகியுள்ள

15

## கடற்படையை தாக்கினரென அனலைதீவில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் அனலை தீவில் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் இருவர் காயமடைந்தனர். தாக்கியவர்களை கைதுசெய் வதற்காக கடற்படையினரும் பொலிஸாரும் அங்கு நேற்று இரவிரவாக தேடுத லில் ஈடுபட்டமை

12

## விருப்பு வாக்கு இலக்க வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஜூன் 10

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட் பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கம் அடங்கிய வர்த்தமானி நேற்று மதியம் வெளியாகியுள்ளது. 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு

15

## 196 ஆசனங்களுக்காக 7,452 பேர் போட்டி!

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்றுக்கு வாக்கெடுப்பின் மூலம் 196 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 7 ஆயிரத்து 452 வேட்பாளர்கள் இந்தமுறை போட்டியிடுகின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலும் 617 சுயேச்சைக் குழுக்களிலும் இவர்கள் களமிறங் கியுள்ளனர்.

12

## நேற்றும் முகமாலையில் எலும்பு எச்சங்கள் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 10

முகமாலையில் நேற்று நடைபெற்ற அகழ்வின் போது 8 மகசின்கள், துப் பாக்கி ரவைகள், சில எலும் புக்கூடுகள், உடைகள், 3 கைக்குண்டுகள் என்பன மீட்கப்பட்டன.

15

## கூட்டமைப்பின் கரங்களை தேர்தலில் பலப்படுத்துக!

தமிழர்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 10

"தமிழர்களுக்கான அரசி யல் தீர்வை வென்றெ டுக்க நாம் ஓயாது பய ணித்துக்கொண்டிருக் கின்றோம். எம்மைத் தவிர வேறு எவரும் இந் தப் பயணத்

12



## நாடாளுமன்ற அரசியலுக்கு மங்கள சமரவீர 'குட்பை'

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்ற அரசியலிலிருந்து விடை பெறப்போகின்றேன் என முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர நேற்று அதி காரபூர்வமாக அறிவித்தார். எனவே, பொதுத்தேர்தலில் தனக்கான விருப்பு வாக்கை வழங்கவேண்டாம் என்று மாத்தறை மாவட்ட மக்

15

இந்தியருடன் பழகிய

## 13 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் தங்கியிருந்த இந்திய புடவை வியாபாரிக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை இந்தியத் தூதரகம் உறுதிப் படுத்தியுள்ளதாக, வடக்கு மாகாண

12

## சம்பந்தன் புகழ்வது அரசியல் நாடகமே

சாடுகின்றார் தவராசா

யாழ்ப்பாணம், ஜூன் 10

மக்களின் நாயகன் மகிந்தராஜபக்ஷ என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புகழ்ந் துள்ளமையானது அர சியல் நாட

15

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

011 200 88 88

செலான் வங்கி

# யாழுக்கு மீண்டும் கொரோனா வராது

## கூறுகிறார் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 10

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவுவதற்கான சாத்தியங்கள் மிகமிகக் குறைவு என்று யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

மருத்துவமனையில் நேற்றுக் காலை நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் கொரோனா பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. வடக்கில் உள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது. வடக்கில் உள்ள தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ளவர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் போது ஒரு சிலருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. வடக்கிலுள்ளவர்களுக்கு கொரோனா பரவல் தற்போதைய நிலையில் இல்லை என்று உறுதியாகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குச் சென்றுள்ள இந்தியப் பிரஜைக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் ஊடாக அறியக் கிடைத்துள்ளது. முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார். என்றார். (ஒ,5,20)

# யாழில் டெங்கு கட்டுப்பாட்டுக்குள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் மக்களின் ஒத்துழைப்புக் காரணமாக கட்டுப்பாட்டில் இருப்பதாக யாழ். போதனா மருத்துமனையின் பொதுமருத்துவ நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அண்மைய நாள்களாக போதனா மருத்துவமனை விடுதிகளில் 30 டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளர்கள் அனைவரும் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இரு டெங்கு நோயாளர்கள் மட்டும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு டெங்குப் பாதிப்பு ஏற்படவில்லை. இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பே காரணம்.

டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தினாலும் டெங்கு நுளம்பை கட்டுப்படுத்துவதில் பெரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது, என்றார். (ஒ,5,20)

# தனிமைப்படுத்தல் மையங்களிலும் வாக்களிப்பு!

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்றத் தேர்தலின்போது தேவைப்பட்டால் தனிமைப்படுத்தல் மையங்களிலும், வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து திரும்புவோர், இராணுவத்தினரால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் 14 நாள்கள் தங்கவைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அடுத்து வரும் வாரங்களில் பெருமளவு இலங்கையர்கள் நாடு திரும்புவதற்காக காத்திருக்கின்றனர். தேர்தல் நடைபெறும்போது, தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருப்போருக்காக அங்கு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான சுகாதார வழிகாட்டல் நெறிமுறைகளில், தனிமைப்படுத்தல் மையங்களில் தேர்தலை நடத்துவதற்கான நடைமுறைகள் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் அமைக்கப்படும்வாக்களிப்புநிலையங்களில், பணியாற்றும் அனைத்து அதிகாரிகளும், உடலை முழுமையாக மறைக்கும் வகையிலானபாதுகாப்புஅங்கி அணிய வேண்டும் என்று அந்த வழிகாட்டு நெறியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

# 'சூம்' தொழில்நுட்பத்தில் தகவல்கள் திருட்டு

தொடர்பாடல் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்குப் பயன்படும் நவீன 'சூம்' தொழிநுட்பத்தின் 4.6.10 முறைமையின் ஊடாக அதனைப் பயன்படுத்துவோரின் தரவுகள் திருடப்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என்று இலங்கை கணினி விவகார அவசர ஆயத்தக்குழு எச்சரித்திருக்கிறது.

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து, வீட்டிலிருந்தவாறே வேலை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் பெருமளவான முன்னணி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் என்பன தமது கூட்டங்களையும் கல்வி நடவடிக்கைகளையும் இதனூடாகவே நடத்துகின்றன. இந்தநிலையில் இதுகுறித்து இலங்கை கணினி விவகார அவசர ஆயத்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்த 'சூம்' முறைமையில் இடம்பெறும் கலந்துரையாடல்கள் ஊடாகத் தகவல்களைத் திருடுவதற்கான இரு வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை 'சைபர்' பாதுகாப்பு தொடர்பான ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன.

அதன்படி 'சூம்' முறைமையின் பயனர்கள் தமது கலந்துரையாடல்களின் போது ஜிப் வீடியோக்களைப் பரிமாற அனுமதிக்கப்படுக்கின்றது. இதனூடாகத் தகவல்கள் திருடப்படும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அதே போன்று 'சூம்' முறைமையை பயன்படுத்துவதற்காக இரகசிய இலக்கத்தை கலந்துரையாடல்களில் பரிமாறுவதன் மூலமும் இந்த முறைமையில் தகவல்கள் களவாடப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இதனூடாக மிகவும் இரகசியமான தகவல்கள்கூட தொடர்பற்ற மூன்றாம் தரப்பினருக்குச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ,5)

# ஹெரோய்னுடன் நால்வர் கைது

கொடிகாமம், ஜூன் 10

ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேர் யாழ்ப்பாண பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கொக்குவில் மற்றும் பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

# அமெரிக்காவுக்கு எதிராக போராட முற்பட்டோர் கைது

கொழும்பு, ஜூன் 10

இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு எதிரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற முன்னிலை சோசலிச கட்சியின் உறுப்பினர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் கொல்லப்பட்ட கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் பிளொயிட்டின் சாவுக்கு நீதிகோரி இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோட்டை நீதிமன்றம் இந்தப் போராட்டத்துக்கு நேற்றுமுன்தினம் தடை விதித்திருந்தது. நேற்று கொள்ளுப்பிட்டி சந்தியில் இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தயாரானபோது, அங்குசென்ற பொலிஸார், ஆர்ப்பாட்டத்ததுக்கு வந்திருந்த சிலரை விரட்டிவிட்டு, ஏற்பாட்டாளர்கள் 10 பேரை கைதுசெய்து கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (ஒ,5)



# கைக்குண்டு மீட்பு

கொடிகாமம், ஜூன் 10

யாழ்ப்பாணம் அரியாலையில் வீடு ஒன்றின் தோட்ட காணியில் கைக்குண்டு ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வீட்டுத் தோட்டக் காணியில் கைக்குண்டு இருப்பதை அவதானித்து யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். அதனையடுத்து அது மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

# தமிழர்கள் இணையத் தவறின் பேராபத்து உருவாகும்

## அவைத் தலைவர் கூறுகின்றார்

கிழக்கு மாகாண மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான செயலணி, பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான முயற்சியின் ஒரு பகுதி. இந்த சந்தர்ப்பத்தில் கடந்தகால படிப்பினைகளின் அடிப்படையில் தமிழ்பேசும் மக்கள் ஒன்றிணையதவறினால்பேராபத்தேஉருவாகும். இவ்வாறு வடக்கு மாகாணசபை அவைத் தலைவர்சி.வி.கே.சிவஞானம்தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார்ப்புதைகுழி நூற்றாண்டு பழமையானது என்றுகூறி அதனை தொடர்ந்து ஆய்வு செய்யாமல் மூடுவதற்கு முண்டியடித்தவர்கள் உள்ளடங்கலாக சிங்கள இனவாத குழுக்களே கிழக்கு மாகாண மரபுரிமை செயலணியில் உள்ளடங்கியிருக்கின்றனர். இந்த செயலணியின் நோக்கம் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதே. தேர்தல் முடிவின் பின்னர் நிலைமை மேலும் மோசமாகலாம்.

தற்போதைய சூழலில் தமிழ்பேசும் மக்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதே பயனுள்ளதாக இருக்கும். தனித்தனியான பயணங்கள் ஆபத்தானவை. இது குறித்து முஸ்லிம் தலைவர்களும், தமிழ் தலைவர்களும் அதிகம் கரிசனை காட்டவேண்டும்- என்றார். (த-20)



## நொருங்கியது கார்

வவுனியா, ஜூன் 10
கட்டுப்பாட்டை இழந்த கார் வீதிக்கரையில் இருந்த தொலைபேசிக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
இந்த விபத்து வவுனியாவில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை நடந்துள்ளது. விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
நுவரெலியாவில் இருந்து யாழ்ப்பாணம் சாவகச்சேரி நோக்கிப் பயணித்த கார், வவுனியா தேக்கவத்தை பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த போது வீதிக் கரையில் இருந்த தொலைபேசிக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
விபத்தில் காரைச் செலுத்தி வந்த நபர் படுகாயமடைந்தார். விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-110,18)

# தேர்தல் திகதியை விடவும் கல்வி மிக முக்கியமானது

### என்கிறார் அகிலவிராஜ் காரியவசம்

கொழும்பு, ஜூன் 10
**தேர்தல் திகதியை விடவும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மிக முக்கியமானதாகும். சஹ்ரானது தாக்குதல் இடம்பெற்றபோது ஏற்பட்டிருந்த நெருக்கடிக்கு மத்தியிலும் கல்வி அமைச்சர் என்ற வகையில் விரைவில் பாடசாலைகளை ஆரம்பித்திருந்தேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன. பாடசாலைகளின் ஆரம்பம் தொடர்பில் இன்னமும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பாடசாலைகளைத் தொடர்ந்தும் மூடிவைத்திருக்க முடியாது. அவற்றைத் திறப்பதற்கான வேலைத்திட்டமொன்று தேவை. இதனால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான திகதியை அரசாங்கம் அறிவிக்கும் போது பாடசாலைகளைத் திறப்பதற்கான திகதிகளை ஏன் அறிவிக்க முடியாது. தேர்தல் திகதியை விடவும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மிக முக்கியமானதாகும். சஹ்ரானது தாக்குதல் இடம்பெற்ற போது ஏற்பட்டிருந்த நெருக்கடிக்கு மத்தியிலும் கல்வி அமைச்சர் என்ற வகையில் விரைவில் பாடசாலைகளை ஆரம்பித்திருந்தேன். இதற்கு முழுமையான பாதுகாப்புகளைப் பெற்றுக் கொடுத்திருந்தோம். இதன்போது பலரும் எம்மை விமர்சித்திருந்தனர். ஆனால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் அக்கறை செலுத்தியே நாம் இவ்வாறு செய்திருந்தோம். அரசாங்கம் தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றது. பொருள்களின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளன. சின்ன வெங்காயத்தின் விலை சொகுசுப் பொருள்களின் விலைக்கு சமமாக உள்ளது. மக்கள் இன்றும் வாழ்வாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். பிள்ளைகளுக்கு போஷாக்கைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையும் தற்போது தோற்றம் பெற்றுள்ளது - என்றார். (ப)

## விமர்சித்தோர் தற்போது ஆதரவளிப்பது கீழ்த்தரம்!

### சம்பிக்க ரணவக்க சீற்றம்

கொழும்பு, ஜூன் 10
கடந்த அரசாங்கத்தில் ஹோமாகம பிட்டிபன தொழிநுட்பப் பூங்காவில் அமைக்கப்பட்ட தொழிநுட்ப பீடத்துக்கு எதிராக பல்வேறுபட்ட விமர்சனங்களை முன்வைத்த அப்போதைய எதிர்தரப்பினர், தற்போது ஆளும் தரப்பில் இருந்து கொண்டு அதனை முன்னின்று திறந்து வைப்பதை விடவும் கீழ்த்தரமான செயல் வேறு எதுவுமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தொழில் நுட்ப ஆய்வுகளை விரிவு செய்வதன் ஊடாக நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளை விருத்தி செய்ய முடியும் என உலக வங்கி வழங்கிய ஆலோசனையின் பேரில், அண்ணளவாக 500 பேர் வரையிலான விஞ்ஞானிகளிடம் ஆலோசனை பெற்றே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. புதிய முயற்சிகளுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலே கடந்த அரசாங்கம் ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இந்த தொழில்நுட்ப பீடத்தை அமைக்க எமது அரசாங்கம் தீர்மானித்தது. புதிய முயற்சிகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகம் , கொழும்பு பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் ஆகியவற்றில் உருவாக்கப்பட்ட ஆய்வு கூடங்கள், ஆதர் ஸ்ரீ கிளார்க் நிலையத்தில் உருவாக்கப்பட்ட சந்திரிகா தொழில் நுட்பகூடம் மற்றும் ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட இந்த தொழில்நுட்ப பீடமும் கடந்த அரசாங்கத்தில் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். இது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கொரியாவுக்குச் சென்று ஆராய்ந்து பார்த்திருந்தார். ஹோமாகம பிட்டிபன பகுதியில் அமைக்கப்பட்ட தொழிநுட்ப பீடத்துக்கு அப்போது பெரும் விமர்சனங்களை முன்வைத்தவர்கள் இன்று ஆளும் தரப்பில் இருந்து கொண்டு திறந்து வைப்பதைப் போன்று கீழ்த் தரமான செயல்வேறு எதுவும் இல்லை. தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான திறப்பு விழாக்கள் ஊடாக தங்களது தேர்தல் நடவடிக்கைகளுக்கு இலாபம்ஈட்டிக்கொள்ள முயற்சித்து வரும் ஆளும் தரப்பினர். இந்த விவகாரம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி பெற்றுக் கொண்டுள்ளார்களா என்பது தொடர்பில் விளக்கமில்லை -என்றார். (ப)



### பணி இடைநிறுத்தப்பட்ட

## நீதிபதிக்கு எதிரான வழக்கை விசாரிக்க இடைக்காலத் தடை

கொழும்பு, ஜூன் 10
பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள, எம்பிலிபிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டியவுக்கு எதிராக நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கை விசாரிப்பதையடுத்து, மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்தது.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் சேர்ந்து பொய்ச் சாட்சிகளை உருவாக்க சதித் திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் இரண்டாவது சந்தேகநபராக தன்னைப் பெயரிட்டு இடம்பெறும் வழக்கு விசாரணைகளுக்கு தடை விதிக்குமாறு கோரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள, எம்பிலிபிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டிய மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த ரீட் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டே நீதிமன்றம் இந்த இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்தது.
குறித்த ரீட் மனுவை விசாரித்து முடிக்கும் வரை அந்த இடைக்காலத் தடை அமுலில் இருக்கும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ், சோபித்த ராஜகருணா ஆகியோரை உள்ளடக்கிய நீதிபதிகள் குழாமே இந்த இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.
குறித்த மனு பரிசீலனைக்கு வந்த போது, பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள, எம்பிலிபிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டிய சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மன்றில் முன்னிலையானார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் சேர்ந்து பொய்ச் சாட்சிகளை உருவாக்க சதித் திட்டம் தீட்டியதாக கூறப்படும் விடயம் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் இரண்டாவது சந்தேகநபராக தனது சேவை பெறுநரைப் பெயரிட்டு, அவரை மன்றில் முன்னிலையாக நுகேகொடை நீதிவான் விடுத்த அறிவித்தல் சட்டத்துக்கு முரணானது என அவர் வாதிட்டார்.
விடயங்களை ஆராய்ந்த மேன் முறையீட்டு நீதிமன்றம், நீதிபதி கிஹான் பிலபிட்டியவுக்கு எதிரான நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் உள்ள வழக்கை விசாரிப்பதற்கு இடைக்காலத் தடை விதித்தது. (ப)

## தொழில்நுட்ப பீடம் நேற்று திறப்பு

கொழும்பு, ஜூன் 10
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் புதிய தொழில்நுட்பபீடம் ஹோமாகம பிட்டிபன தொழில்நுட்ப பூங்காவில் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
இலங்கையின் முதல் மற்றும் மிகப்பெரிய தொழில்நுட்ப பீடமாக 3 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு 1600 மாணவர்கள் கற்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
புதிய தொழில்நுட்ப பீடம் திறக்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் சிறப்பு நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. முத்திரையை அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் தபால்மா அதிபர் ஜெனரல் ரஞ்சித் ஆரியரத்ன வழங்கினார்.
சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் சுதந்தா லியனகே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திருமதி ரேணுகா நில்மினி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# யாழ்ப்பாணத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்

## மாவட்டச் செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 10

**பல்வேறுபட்ட இயற்கை அம்சங்களைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும், சமநிலையை ஏற்படுத்துவதற்கும் அனைவரும் முன்வர வேண்டும் என்று யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்வில் சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாடு பல்வேறுபட்ட இயற்கை அம்சங்களைக்கொண்ட விசேட சிறப்பம்சங்களையுடைய ஒரு குடாநாடாகும். குறிப்பாக கடற்கரை, மணல் திட்டுகள், பல்வகை உயிரினங்கள் வாழக்கூடிய கடும் காடுகள், நீர் ஏரிகள் என பல்வேறு தரப்பட்ட வகையான விசேஷமான சிறப்பம்சங்களைக்கொண்ட குடாநாட்டில் நாங்கள் வசித்து வருகின்றோம். இவற்றை மேலும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

இயற்கையிலிருந்து பல்வேறுபட்ட வளங்களை பெற்றுக் கொள்கிறோம். எனினும் இயற்கை சமநிலையை பேணுவதைத் தவிர்த்து விட்டோம். இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

கடந்த காலங்களை ஒப்பிடும்போது எங்களுடைய இலங்கை தற்போது இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்வதில் நாலாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்கு வந்துள்ளது. எமது இலங்கை சிறிய தீவாக இருந்த போதிலும், நாங்கள் வரட்சி மற்றும் வெள்ளம் போன்ற பல்வேறு இயற்கை பேரழிவுகளைச் சந்தித்து வருகின்றோம்.

இயற்கைக்கு நாங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதே அளவுதான் எமது மானுட இருப்பு பேணப்படும்.

எனவே நாம் எதிர்கால சமுதாயத்தை சிறந்த ஒரு சமூகமாக உருவாக்குவதற்கு இயற்கை சமநிலையைப் பேண வேண்டியது கட்டாயமான விடயமாகும்- என்றார். (க-111)





உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டச் செயலகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பயன்தரும் மரங்களும் வழங்கப்பட்டன. யாழ்.மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் மாவட்டச் செயலகத்தின் வளாகத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. (க-20,111)

## பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு,ஜூன் 10

பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவருக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார்.

தலங்கம பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளே வெலிகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். (ஐ)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 10

மின்சாரம் தாக்கியதில் இந்தியப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அலவத்துகொட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

தனியார் நிறுவனமொன்றின் மேல் மாடியில் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மின்கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் அலவத்துகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## வெவ்வேறு சம்பவங்கள்: ஐவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூன் 10

தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவரும், வீதி விபத்துக்களில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடந்துள்ளன. நாவற்குழி ஐயனார் கோவிலடியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய இருவரும், நுணாவில் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் கைதடி நுணாவிலைச் சேர்ந்த 19 வயது இளைஞரும் காயமடைந்தனர்.

அதேவேளை நுணாவில் பகுதியில், இடம்பெற்ற வீதி விபத்தில் அப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரும், மட்டுவில் வடக்கில் இடம்பெற்ற விபத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரும் காயமடைந்தனர். (க-9)

### தொண்டர் படையணியின்

## 98 சிரேஷ்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜூன் 10

இலங்கை தொண்டர் படையணியின் 98 சிரேஷ்ட அதிகாரிகள், அடுத்த நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என இராணுவச் செயலகம் அறிவித்தது.

பாதுகாப்பு தலைமைப் பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைவாக பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் இந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக 61 அதிகாரிகள் கப்டன் நிலையில் இருந்து மேஜர் நிலைக்கும் 19 அதிகாரிகள் மேஜர் நிலையில் இருந்து லெப்டினன்ட் கேர்ணல் நிலைக்கும் 14 அதிகாரிகள் லெப்டினன்ட் கேர்ணல் நிலையில் இருந்து கேர்ணல் நிலைக்கும் 4 அதிகாரிகள் லெப்டினன்ட் கேர்ணல் நிலையில் இருந்து கௌரவ கேர்ணல் நிலைக்கும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கை தொண்டர் 1861 ஆம் ஆண்டு சிவில் ரயிபல் குழுவாக தோற்றம் பெற்றது. பின்னர் வெளியிட்ட பிரகடனம் ஒன்றின் ஊடாக காலாட்படை சிப்பாய்களுக்கான அடிப்படையாக மாற்றம் பெற்றது. 1981 சித்திரை மாதம் 1ஆம் திகதி இலங்கை தொண்டர் படையணியாக இருந்தது. 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி இலங்கை குடியரசாக மாறியதன் பின்னர் இலங்கை தொண்டர் படையணியாக பெயர் மாற்றம் பெற்றது. இது நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை நூறு அல்லது ஆயிரக்கணக்கிலான உயர் திறனுடனான காலாட்படை வீரர்கள் மற்றும் தொண்டர் தொழில் வல்லுநர்களை நாட்டுக்காய் உருவாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 362 மாணவர்களுக்கு சிப்தொர புலமைப்பரிசில்

உடுவில், ஜூன் 10

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி திணைக்களத்தின் சமூக பாதுகாப்பு அபிவிருத்தி பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் திட்டத்தில் 362 மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி முத்திரையைப் பெறுகின்ற குடும்பங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்று, கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு தொகையாக மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படுகிறது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 87 மாணவர்களுக்கு 2 மாதங்களுக்கான கொடுப்பனவுகளும், 86 மாணவர்களுக்கு ஒரு வருடத்துக்கான கொடுப்பனவும், 189 பேருக்கு 2 வருடங்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

மாதாந்தம் பாடசாலை வரவை உறுதி செய்யும் பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் கொடுப்பனவு வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. தற்போது கொடுப்பனவுகளை மாதாந்தம் சமுர்த்தி வங்கிப் பிரிவினூடாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க39)

## 1,35,113 பயனாளிகளுக்கு உதவிக்கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொரோனா காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமுர்த்தி உதவிக் கொடுப்பனவுகள் யாழ்.மாவட்டத்தில் முதலாம் கட்டமாக 1 லட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ரி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக் காலப்பகுதியில், நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குக் காலத்தில் அரசின் உத்தரவுக்கமைய சமுர்த்தி வேலைத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கான உதவித் தொகைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. அந்தவகையில், இரண்டாம் கட்டமாக அந்த 1 லட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்களில் இன்று வரை 1 லட்சத்து 34 ஆயிரத்து 139 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பயனாளிகளுக்கும் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-என்றார். (க-106)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மறுபடியும் முதலில் இருந்தா?

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு இரட்டைக் கோபுரங்கள் மீதான 11/9 தாக்குதலின் பின்னர் அது குறித்து ஆராய விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தத் தாக்குதலை எப்படித் தடுத்திருக்கலாம், அமெரிக்க உளவுத்துறை எங்கே கோட்டை விட்டது என்பன போன்ற விடயங்களெல்லாம் அந்த விசாரணையின்போது கவனத்தில் எடுக்கப்பட்டு, அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் பிரதானமானது " இப்படி ஒரு தாக்குதல் நடக்குமென அமெரிக்க உளவுத்துறை சந்தேகப்பட்டிருக்க வேண்டும் அல்லது கற்பனை செய்திருக்க வேண்டும். அவ்வாறு கற்பனையோ, சந்தேகமோ வந்திருந்தால் அதனைத் தடுக்கும் வழிகளை முன்கூட்டியே மேற்கொண்டிருக்கலாம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இன்னும் சரியாகச் சொன்னால், வெள்ளம் வர முன்னரே அணை கட்டியிருந்தால் அனர்த்தத்தை தடுத்திருக்கலாம் இல்லையேல் குறைத்திருக்கலாம் என்பதே அந்தப் பரிந்துரை.

இப்படி வெள்ளம் வரமுன்னர் அணைகட்டுவதென்பது அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு மட்டுமல்லாது , எல்லா வகையான அனர்த்தங்களுக்கும் பொருத்தமானதே. குறிப்பாக கொரோனாவைத் தடுப்பதிலும் வெள்ளம் வர முன்னர் அணைகட்டியிருந்தால், இலங்கையின் விமான நிலையத்தை முன்னரே மூடியிருந்தால் இப்படியான அச்சநிலை ஏற்பட்டிருக்காது. சரி, வந்த பின்னராவது அதனை ஒட்டுமொத்தமாக ஒழிக்கும்வரையாவது பொறுமை காக்காமல், தேர்தலுக்காக அவசரமாக 'கொரோனா அச்சநிலை நீங்கி விட்டது' என்று காட்டுவதில் அரசு கடும்பிடியாக நிற்கிறது. ஆனால் அரசுக்கேற்ற வகையில் தாளம்போட கொரோனாவுக்குத் தெரியாதே. அது தன்பாட்டுக்கு கடற்படையினர், குவைத்தால் வந்தவர்கள் என்று தொற்றிக்கொண்டே இருக்கிறது. ஆனாலும் "இலங்கையில் சமூகத் தொற்று இல்லை, தனிமைப்படுத்தப்பட்டோருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று ஏற்படுவதால் ஆபத்தான நிலை இல்லை" என்று சொல்லிச்சமாளிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் தான் , யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இந்தியாவுக்கு போன புடவை வியாபாரிக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. மறுபடியும் முதல்ல இருந்தா? என்கிற ரீதியில், மீண்டும் கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளை முனைப்போடு யாழ்ப்பாணத்தில் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு , மூன்று நாள்களில் குறித்த வியாபாரிக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. 14 நாள்களின் பின்னரே கொரோனாத் தொற்று ஏற்பட்டமையைக் கண்டுபிடிக்க முடியும் என்ற அடிப்படை எடுகோளின்படி, அவருக்கு யாழ்ப்பாணத்திலேயே கொரோனா தொற்றியிருக்க அதிக வாய்ப்புண்டு. அப்படியானால் இன்னமும் கொரோனாவைப் பரப்பக்கூடிய நோயாளர்களோ, நோய்க்காவிகளோ யாழ்ப்பாணத்தில் அதுவும் சமூக மட்டத்தில் இருக்கிறார்களா? என்ற பேரச்சம் தரும் சந்தேகம் எழுகின்றது. அப்படி சமூக மட்டத்தில் கொரோனா பரப்பக்கூடியவர்கள் இனங்காணப்படாது இதுவரை சுதந்திரமாக உலவுகின்றனர் எனில், அவர்கள் மூலம் இந்திய வியாபாரி தவிர்ந்த வேறு பலருக்கும் கொரோனா தொற்றியிருக்கவும், அதனால் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொரோனா விஸ்வரூபமெடுக்கவும் சாத்தியங்கள் அதிகமுண்டு. இந்தச் சாத்தியங்களைப் புறமொதுக்காது செயற்படுதல் என்பது இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் சொன்னது போல " கற்பனை அல்லது சந்தேகம் ஏற்பட்டிருந்தால் அதனைத் தடுத்திருக்கலாம்' என்பதற்கு ஒப்பானது. எனவே சமூகப் பரம்பல் ஒன்று தோன்றாலாம் என்ற சந்தேகத்தினை அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுத்தல் என்பதும், மக்களை விழிப்புணர்வு அடையச் செய்தல் என்பதும் கொரோனா மீண்டுமொருமுறை வந்தாலும் தடுக்க உதவுமே தவிர, பாதகமான எந்தவிளைவையும் ஏற்படுத்தாது.

இந்தநிலையில் யாழ்ப்பாணத்தில் மீண்டும் கொரோனா மீண்டும் பரவுவதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவு என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். இத்தகைய கூற்றுக்கள் மக்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவினாலும், "இனிமேல் கொரோனா பரவாது" என்ற அலட்சியப்போக்கையும் ஏற்படுத்தக்கூடும். அந்த அலட்சியம் சுகாதார நடைமுறைகளையும் உதாசீனம் செய்ய வைக்கலாம். இவையெல்லாம் கொரோனா மீண்டும் பரவ நாமே வழி செய்தது போலாகிவிடும். நம்பிக்கை ஊட்டுவதில் தவறில்லை. ஆனால் மிகை நம்பிக்கையூட்டுவதன் மூலம் மக்களை விழிப்புணர்வு நிலையில் இருந்து தடம்மாறச் செய்யாமல் பார்த்துக் கொள்வதும் உரியவர்களின் கடமையல்லவா?

# நாட்டின் நிதிக் கட்டமைப்பு வலுவான நிலையில் உள்ளது

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 10**

**நாட்டின் நிதிக் கட்டமைப்பு வலுவாக உள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் நிதியியல் முறைமையும் நிதியியல் நிறுவனங்களும் பலவீனமான நிலையில் காணப்படுகின்றன என்றும் அத்தகைய நிறுவனங்களில் வைப்பிலிடப்பட்ட தமது வைப்புக்களை பொதுமக்கள் இழக்கும் இடர்நேர்வில் காணப்படுகின்றனர் என்றும் பல்வேறு குழுக்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் ஆதாரமற்ற ஊகங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டில் பொதுமக்களின் வைப்புக்களை ஏற்கின்ற வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் இரண்டினதும் ஒழுங்குமுறைப்படுத்துநராக இலங்கை மத்திய வங்கியானது, பொதுமக்களின் வைப்புக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு அனைத்து சாதகமான வழிமுறைகளும் தொடர்ச்சியாக எடுக்கப்படும் என்பதனை பொதுமக்களுக்கு உறுதியாக அறிவிக்க விரும்புகின்றது என்று தெரிவித்துள்ளார். (எ-ரி1)

## சிறைச்சாலைக்குள் நடக்கும் குற்றங்களை தடுக்க திட்டம்!

கொழும்பு, ஜூன் 10

பாதாள உலகத்துடன் தொடர்புள்ள குற்றவாளிகளால் சிறைச்சாலைகளுக்குள் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க விசேட திட்டம் எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் என்று புதிய சிறைச்சாலை ஆணையாளர் துசார உபுல்தெனிய தெரிவித்தார்.

பாதாள உலக செயற்பாடுகள், போதைப்பொருள் வர்த்தகம் உட்பட பெரும் குற்றச் செயல்களை ஒழிப்பதற்கு ஜனாதிபதி முன்னெடுக்கும் திட்டத்துக்கு சிறைச்சாலை திணைக்களத்தின் முழுமையான ஒத்துழைப்பு கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சிறைச்சாலை ஆணையாளர் நேற்று கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே இவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-ரி1)

## திடீர் சோதனையில் சிக்கிய 61 கைபேசிகள்

நீர்கொழும்பு, ஜூன் 10

நீர்க்கொழும்பு சிறைச்சாலையில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது 61 கைப்பேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

புதிய சிறைச்சாலை ஆணையாளர் துசார உபுல்தெனிய பொறுப்பேற்றுள்ள நிலையில் பாதாள உலக செயற்பாடுகள், போதைப் பொருள் வர்த்தகம் உட்பட பெரும் குற்றச் செயல்கள் ஒழிக்கப்படும் என்றும் சிறைச்சாலைக்குள் பெரும் மாற்றங்களை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். இதன் ஒரு கட்டமாகவே திடீர் சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-ரி1)

# சகலரும் இணங்கக்கூடிய கல்விக் கொள்கை அவசியம்

## ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

சகலரும் இணங்கக்கூடிய தேசிய கல்விக் கொள்கையைத் தயாரிப்பது முக்கியமானது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வி நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி செயலணி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் கூடியது .

இதில் தேசிய கல்விக் கொள்கையை வகுக்கும் பணிகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தயாரிக்கப்பட்டு வரும் தேசிய கல்விக் கொள்கையை ஜனாதிபதி பரிசீலித்ததுடன் இந்த முயற்சியில் எட்டப்படும் தீர்மானங்கள் நாட்டின் மீதும், எதிர்கால சந்ததி மீதும் தாக்கம் செலுத்துவதால் சகலரும் இணங்கக்கூடிய கொள்கையைத் தயாரிப்பது முக்கியமானது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தக் கொள்கை பற்றிய இறுதி அறிக்கையை அங்கீகரிப்பதற்கு முன்னதாக அதைக் குறைந்தபட்சம் இரு மாதங்களேனும் சமூகக் கருத்தாடலுக்கு உட்படுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். எதிர்காலத்தில் ஒன்லைன் கல்வி முறைமையை கூடுதலாக பிரபலப்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்

சுபீட்சத்தின் தொலைநோக்கு என்ற கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய, அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வி வாய்ப்புக்கள் என்ற தொனிப்பொருளில் புதிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றுள்ளது. (எ-ரி1)

# உப உணவுச் செய்கையில் மன்னார் தன்னிறைவடையும்

## மாவட்டச் செயலர் தகவல்

**மன்னார்,ஜூன் 10**
**மன்னார் மாவட்டம் உப உணவுச் செய்கை ஊடாக தன்னிறைவு அடையக்கூடிய நிலைமை ஏற்படும் என்று மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஸ் தெரிவித்தார்.**



மன்னார் மாவட்டத்தின் இந்த வருடத்துக்கான (2020) சௌபாக்கியா வீட்டுத்தோட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க் கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

இதில் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் 14 ஆயிரம் பைக்கற் விதைகள் மற்றும் பயிர்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சமுர்த்தி திட்டத்தின் ஊடாக 2 ஆயிரம் பைக்கற் விதைகள் வழங்கப்பட்டன.

அதன் அடிப்படையில் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அடைவைவிட கூடுதலாக இதுவரை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனைவிட இன்னும் கூடுதலாக எதிர்பார்க்கப்பட்டுள்ளமையால், அடுத்து வருகின்ற ஒரு மாதத்துக்குள் மிகுதிச் செய்கை மேற்கொள்ளப்படும்.

வண்டு மற்றும் பூச்சி போன்றவற்றின் தாக்கங்களில் இருந்து பாதுகாக்கும் பட்சத்தில் பயிர்ச் செய்கை வெற்றியடையக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உப உணவுச் செய்கை ஊடாக தன்னிறைவு அடையக்கூடிய நிலைமை ஏற்படும்.

தற்போது தம்புள்ளை,யாழ்ப்பாணம், முழங்காவில் போன்ற பகுதிகளில் இருந்து உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

எமது உற்பத்திகளில் ஒரு நிறைவு காணப்படும் பட்சத்தில் உப தானிய செய்கையில் ஒரு நிறைவை அடைய முடியும்.

குறித்த செய்கையின் முன்னேற்றம் தொடர்பாக பிரதேச செயலாளர்கள் அவதானித்து அறியத்தருமாறும் வேண்டுகோள் விடுக்கின்றேன்-என்றார்.

கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மேலதிக செயலாளர் கே.எஸ்.வசந்த குமார், பிரதேச செயலாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (க-56)

# பசுக்கன்றை மோதிய கூலர்; பயணித்தோர் மீது தாக்குதல்

முல்லைத்தீவு,ஜூன் 10

வேகமாகப் பயணித்த கூலர் பசுக்கன்றை மோதித் தள்ளியது. சம்பவத்தைத் தொடர்ந்து வாகனத்தில் பயணித்தவர்கள் மீது கிராமத்தவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். அவர்களில் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி வீதியில் நேற்று நடந்துள்ளது. புத்தளம், நீர்கொழும்பைச் சேர்ந்தவர்களின் மீன் ஏற்றும் கூலர் வாகனம் கருநாட்டுக்கேணிப் பகுதியில் வேகமாகப் பயணித்து, வீதியில் நின்ற பசுக்கன்றை மோதித்தள்ளியது.

விபத்தில் பசுக்கன்று உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து அந்த கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வாகனச் சாரதி மீது தாக்குதல் நடத்தினர். அதில் பயணித்த மேலும் இருவர் மீதும் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் காயமடைந்த 38,25,21 அகவையுடையவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-19)



கண்டாவளை பிரதேச செயலகத்தால் சூழல் தினத்தை முன்னிட்டு பயன்தரு மரக்கன்றுகள் பரந்தன் ஏ-9 வீதியில் நடப்பட்டன. (க-159)

# கஞ்சா விற்பனை சந்தேகநபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,ஜூன் 10

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சாவகச்சேரி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் மறைந்திருந்து, கஞ்சாவை விற்பனை செய்த நபரைக் கையும் மெய்யுமாகக் கைது செய்தனர்.

அவரைச் சோதனையிட்டபோது 6 ஆயிரத்து 310 மில்லி கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டது.

அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (க-9)

# சுற்றாடல் தினத்தில் பல வேலைத்திட்டங்கள்

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகம், கரைச்சி பிரதேச சபை, தர்மபுரம் சுகாதார சேவைகள் பணிமனை ஆகியன இணைந்து சிரமதான பணிகளை ஏற்பாடு செய்தன.

100க்கும் மேற்பட்ட ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கண்டாவளை பிரதேச எல்லைக்குட்பட்ட பரந்தன் ஏ9 வீதியில் சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது உக்காத பொருள்கள், பொலித்தீன் வகைகள் என தரம் பிரிக்கப்பட்டு ஏ9 வீதியின் இருமருங்கும் துப்புரவு செய்யப்பட்டன.

கண்டாவளை பிரதேச செயலாளர், கரைச்சி பிரதேசசபை தவிசாளர், தர்மபுரம் சுகாதார சேவைகள் அதிகாரிகள் சிரமதானப்பணிகளில் இணைந்திருந்தனர். (க-6)

# வங்கியை உடைத்து பணம் கொள்ளை

## வரக்காபொலவில் நேற்று அதிகாலை சம்பவம்

கொழும்பு, ஜூன் 10

வரக்காபொல பிரதான வீதியில் அமைந்துள்ள சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி நேற்று அதிகாலை உடைக்கப்பட்டு, அங்கிருந்த ஒரு தொகை பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு-கண்டி பிரதான வீதியில், வரக்காபொல, எண் 171, பிரதான வீதியில் அமைந்துள்ள இந்த வங்கியின் கட்டடத்தின் சுவரைத் துளைத்து வங்கிக்குள் நுழைந்து கொள்ளையர்கள் அங்கிருந்த பாதுகாப்பு பெட்டகங்களில் ஒன்றை உடைத்து அதிலிருந்த பணத்தை கொள்ளையடித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வங்கியில் மூன்று பாதுகாப்பு பெட்டகங்கள் இருந்தன என்றும், அவற்றில் ஒன்று உடைக்கப்பட்டு பணத்துடன் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் வங்கிமுகாமையாளர் முறைபாடு செய்துள்ளார். கொள்ளையர்களால் பொலிஸ் ரோந்துக் கையொப்ப புத்தகமும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் கேகல்ல பிரதேச குற்றவியல் புலனாய்வு ஆய்வகத்தின் (சி.சி.டி) அதிகாரிகள் முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர். சந்தேகநபர்களை கைது செய்ய மூன்று பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ப)

# கசிப்பு உற்பத்திக்காரர்களால் கிளிநொச்சியில் பேரவலநிலை

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சியில் கடந்த சில மாதங்களாக கசிப்பு உற்பத்தி மிகையாக அதிகரித்துள்ளது. இந்தபேரவலநிலையை உரிய அதிகாரிகள் உடன் கட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சியில் அதிலும் குறிப்பாகச் சாந்தபுரம் கிராமத்தில் தற்போது என்றுமில்லாதவாறு சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால் நாங்கள் பல்வேறு இன்னல்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

குறிப்பாக இப்பிரதேசத்தை அண்மித்த இரணைமடு குளத்தின் அலைகரைப் பகுதி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையோரக்கட்டு பகுதிகள் ஆகிய வற்றிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் அதிகளவில் இடம்பெற்று வருவதுடன், கிராமத்தின் எல்லைப் புறங்களிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறானா செயற்பாடுகளால் அதிகளவான இளைஞர்கள் இவற்றுக்கு அடிமையாகி வருவதுடன், குடும்பப் பிணக்குகள் மற்றும் குடும்பப்பிரிவுகள் என்பனவும் ஏற்படுகின்றன. இது தொடர்பில் பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்களம், விசேட அதிரடிப்படை என்பவற்றின் கவனத்திற்கு கொண்டு சென்றபோதும் சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் இத்தகைய நபர்களைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் அதிக கவனமெடுத்துச் செயற்பட வேண்டும் - என்றனர். (ம)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

சாவகச்சேரி, ஜூன் 10

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் நுணாவில் பகுதியில் மின்கம்பத்துடன் மோதியது. அதில் பயணித்த மீசாலையைச் சேர்ந்த 23 வயது இளைஞன் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்த போதிலும் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர் காயமின்றி தப்பியுள்ளார்.

காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (க-9)



## சிட்டிவேரம் கண்ணகை அலங்காரத் திருவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்க வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வளந்துப் பொங்கலுடன் ஆரம்பமானது.

வருடந்தோறும் மிகவும் சிறப்பாக நடைபெற்றுவரும் 15 திருவிழாக்களும் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இந்த வருடம் நடைபெறவுள்ளது. (சு-159)

# மாணவரை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை நாளையுடன் நிறைவுறும்

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

**கொழும்பு, ஜூன் 10**

**பிலிப்பைன்ஸில் இருந்து 80 மாணவர்கள் நாடு திரும்பினால், வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கை மாணவர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கை நிறைவுபெறும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.**

80 மாணவர்கள் அடங்கலாக 250 பேர் நாளை வியாழக்கிழமை பிலிப்பைன்ஸில் இருந்து அழைத்து வரப்படவுள்ளனர் என ஜனாதிபதியின் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். இந்த நிலையில், அவர்கள் 80 பேரும் நாடு திரும்பினால், வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கை மாணவர்கள் அனைவரையும் நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடு நிறைவுபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெலாரஸில் தற்போது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 250 மாணவர்கள் அடுத்த மாதமளவில் நாடு திரும்பவுள்ளனர் என்றும் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே குறிப்பிட்டுள்ளார். இந்த மாணவர்கள் தற்போது பரீட்சைகளில் தோற்றியுள்ளமையினால், அவர்களை அடுத்த மாதம் அழைத்துவர தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார். (ப)

## வீசாக்களின் செல்லுபடி காலம் மேலும் நீடிப்பு

*குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 10

நாட்டுக்கு வருகை தந்திருக்கும் வெளிநாட்டவர்கள் பெற்றுக்கொண்டிருக்கும் எல்லா வகையான வீசாக்களினதும் செல்லுபடிக் காலத்தை இம் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் ஜூலை 11 ஆம் திகதி வரை மேலும் 30 நாள்களுக்கு நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் தரித்திருக்கும் வெளிநாட்டவர்களின் வீசா அனுமதிப்பத்திரங்களை நீடித்தல் தொடர்பில் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தினால் மே மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமாக இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, அனைத்து வீசா விண்ணப்பதாரிகளும் ஜூலை 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் https://eserviced.immigration.gov.lk/vs <https://eserviced.immigration.gov.lk/vs> என்ற இணையதளத்தில் பிரவேசித்து திகதியொன்றையும் நேரமொன்றையும் ஒதுக்கிக் கொண்டு உரிய வீசாக் கட்டணத்தைச் செலுத்தி தமது கடவுச்சீட்டில் வீசாவை புறக்குறிப்பு இட்டுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 7 ஆம் திகதிக்கும் ஜூலை 11 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் காலாவதியாகும் எல்லா வீசாக்களும் தண்டப்பணம் அறவிடப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. உரியவாறு திகதியொன்றையும் நேரமொன்றையும் ஒதுக்கிக்கொண்டு வருகை தருவோருக்கு மட்டும் திணைக்கள வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியுண்டு-என்றுள்ளது. (ஐ)



## வீதி விபத்தில் இருவர் காயம்

முல்லைத்தீவு, ஜூன் 10

தண்ணீரூற்று குமுழமுனை சந்தியில் இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சேதமாகின. இருவர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர்.

முள்ளியவளை முதன்மை வீதியில் குமுழமுனை செல்லும் சந்தியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது. முச்சக்கர வண்டி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இதில் முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தன. அதில் பயணித்த இருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்

விபத்து குறித்து முள்ளியவளை வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ப-19)

## வவுனியா அம்மாச்சி இன்று முதல் இயங்கும்

வவுனியா, ஜூன் 10

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு அருகே காணப்படும் அம்மாச்சி உணவகம் இன்று முதல் மீளவும் திறக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பணிமனை தகவல் தெரிவித்துள்ளன.

வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அருந்ததிவேல் சிவானந்தன் தலைமையில் அம்மாச்சி உணவகத்தின் ஊழியர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்று முதல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளிகளைப் பேணி மீளவும் திறப்பதற்கும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக சுகாதார நடைமுறையைப் பின்பற்றி பொது மக்கள் சமூக இடைவெளியைப் பேணி ஒத்துழைப்புக்களை வழங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-110)

## கொரோனாவால் உயிரிழப்போரை புதைக்கக்கூடாது

*புவியியல் பேராசிரியர் நீதிமன்றத்தில் அறிக்கை*

கொழும்பு, ஜூன் 10

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இறப்பவர்களை அடக்கம் செய்வது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று புவியியல் பேராசிரியர் திருமதி மெதிகா வித்தானகே உயர் நீதிமன்றத்தில் நேற்று அறிக்கை சமர்ப்பித்தார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதால் நிலத்தடி நீர் மற்றும் மண் மாசுபடக்கூடும் என்றும் அவர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார். கொரோனா காரணமாக இறந்தார் எனக் கூறப்படும் ஒரு நோயாளியின் மகன் உட்பட 12 நபர்கள் தாக்கல்செய்த அடிப்படை உரிமை மனுவின் விசாரணையின் போதே அவர் இந்தத் தகவல்களை நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார். (ம)

### வட்டியற்ற மாணவர் கடன்

## அதிபர்களின் அனுமதிபெற ஆறு நாள்கள் அவகாசம்!

உயர்தர மாணவர்களுக்கு வட்டி அற்ற கடனுதவி மூலமான மேற்படிப்புக்கான வாய்ப்புப் பெறுவதற்கு, அதிபர்களிடம் விண்ணப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்ள ஆறு நாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சின் மாணவர் கடன் துறையின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'வட்டியற்ற மாணவர் கடன் முன்மொழிவு' முறையின் கீழ் உயர்தர மாணவர்களுக்கு மேற்படிப்பைத் தொடர அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக பாடசாலை விண்ணப்பதாரிகளாக 2016 ஆம், 2017ஆம், 2018 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கு அதிபர்களால் விண்ணப்பத்தை உறுதிசெய்து கொள்வதற்காக 6 நாள் கால அவகாசம் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி 2018ஆம் மற்றும் 2019ஆம் கல்வி வருடங்களுக்காக அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் மேற்படி வருடங்களில் உயர்தர சித்தி பெற்ற மாணவர்களுக்கு இந்த மாதம் 9, 10, 11, 12, 15, 16 ஆகிய தினங்களில் பாடசாலை நேரத்தில் விண்ணப்பத்தை உறுதிசெய்து கொள்வதற்கு உதவுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம்.சித்ரானந்தவால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-159)

# கடலம்மா..! எங்களுக்கு எப்போது நீதி?


மண்டைதீவு கடலில் தூயஒளி படகில் படுகொலையான உறவுகளின் நினைவுகளில..

■ குமார்

**1986** ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி அதிகாலை மண்டைதீவுக் கடற்பரப்பில் கரை வலைத் தொழில் செய்ய குருநகரில் இருந்து தூயஒளி படகில் சென்ற குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் அக் கடற்பரப்பில் ரோந்து வந்த கறுப்புச்சட்டை அணிந்த கடற்படையினரால் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்ட துயர நாள் இன்றாகும். இன்றோடு இந்தப் படுகொலை நடைபெற்று 34 வருடங்கள் கடந்துவிட்டன.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான கடற்பரப்பில் தமது குடும்பத்தவர்களின் நிம்மதியான வாழ்வுக்காக மீன்பிடிக்கச்சென்ற குருநகரைச் சேர்ந்த மீனவர்களை, தமது நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டிய இலங்கைக் கடற்படை அதனை மறந்து அவர்களை எதிரிகளாக நினைத்து எதுவித விசாரணையுமின்றி அவர்களது படகை சோதனைகூடச் செய்யாமல் அவர்களைப் படுகொலை செய்தது. இந்தத் துயர நிகழ்வில் குருநகரைச் சேர்ந்த அப்பாவி மீனவர்களான,

| | |
|---|---|
| கி. இஸ்தாக்கி | (வயது - 54) |
| பேதுரு செபதேயு சேவியர் | (வயது - 62) |
| பற்றிக் டோனாஸ் டியுக் | (வயது - 18) |
| எமலியுஸ் மக்ஸ்மஸ் ஈஸ்வரன் | (வயது - 18) |
| மனவல் மரியநாயகம் | (வயது - 35) |
| சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் | (வயது - 28) |
| அருளானந்தம் பெனடிக்ற் வேனா | (வயது - 50) |
| பெனடிக்ற் பவியன் | (வயது - 28) |
| பெனடிக்ற் மாசிலா | (வயது - 26) |
| பெனடிக்ற் அலிஸ்ரன் | (வயது - 28) |
| பந்திராஸ் கமலஸ் | (வயது - 30) |
| பந்திராஸ் யூலியஸ் | (வயது - 32) |
| பந்திராஸ் தவம் | (வயது - 25) |
| தமியான் உதயகுமார் | (வயது - 16) |
| முடியப்பு ராசகுமார் | (வயது - 33) |
| யோன் ஜோர்ஜ் | (வயது - 56) |
| மனவல் பயஸ் | (வயது - 60) |
| ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை | (வயது - 70) |
| ஞானப்பிரகாசம் ஜெயபால் | (வயது - 16) |
| ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன் | (வயது - 14) |
| அருளானந்தம் டொமினிக் பொனிபஸ் | (வயது - 60) |
| அன்ரன் ஷல்ட் லொயிற் | (வயது - 21) |
| மனவல் பற்றிக் | (வயது - 60) |
| சவிரியான் யேசுராசா நிக்சன் | (வயது - 12) |
| முத்துச்சாமி | (வயது - 30) |
| முத்தையா சாமிநாதன் | (வயது - 60) |
| அந்தோனிப்பிள்ளை பர்னாந்து | (வயது - 60) |
| பெனடிக்ஸ் ரமேஸ் | (வயது - 18) |

மற்றும் மண்டைதீவைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் ஆகியோர் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு கொலையுண்டவர்களில் 3 சிறுவர்களும் உள்ளடக்கம்.

அந்தச் சிறுவர்களைக் கூடக் கடற்படை விட்டு வைக்காது வெட்டிக் கொன்றது. இதில் உயிரிழந்தவர்களது சடலங்கள் கடற்பரப்பில் மீட்கப்பட்டு, குருநகர் சனசமூக நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக அன்றைய தினம் வைக்கப்பட்டன. பின்னர் அனைத்து உடல்களும் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அருகருகாக அடக்கம் செய்யப்பட்டன. இந்தக் கல்லறைகளில் இவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டு வெள்ளை வர்ணம் பூசப்பட்டுள்ளது. அத்துடன் தூயஒளி படுகொலையை நினைவூட்டும் முகமாக குருநகர் கடற்கரை வீதியில் குருநகர் சனசமூக நிலையம் முன்பாக கிழக்குப் புறத்தில் நினைவுத் தூபியும் குருநகர் மக்களின் நிதிப் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ளது.

> தமிழ் மக்களுக்குச் சொந்தமான கடற்பரப்பில் தமது குடும்பத்தவர்களின் நிம்மதியான வாழ்வுக்காக மீன்பிடிக்கச் சென்ற குருநகரைச் சேர்ந்த மீனவர்களை, தமது நாட்டு மக்களைக் காப்பாற்றவேண்டிய இலங்கைக் கடற்படை அதனை மறந்து அவர்களை எதிரிகளாக நினைத்து எதுவித விசாரணையுமின்றி அவர்களது படகை சோதனைகூடச் செய்யாமல் அவர்களைப் படுகொலை செய்தது.

இந் நினைவுத் தூபியில் இந் நாளில் மக்கள் இறைவழிபாடு நடத்தி இப் படுகொலையில் உயிர் நீத்தவர்களுக்காக அஞ்சலி செய்கின்றமை வழக்கம்.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழர்களும் ஏனைய இடங்களில் சிங்களவர்களும் பெரும்பான்மையினராக வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். வடக்கு, கிழக்கு கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தமிழர்களுக்கு பூரண உரிமையுண்டு. ஆனால் அரச மற்றும் கடற்படையினரின் உதவியுடன் தெற்கிலிருந்து வரும் சிங்கள மீனவர்கள் தமிழர்களை மீன்பிடிக்கவிடாது அராஜகம் செய்வது வருடாவருடம் இடம்பெறுகிறது. இதனால்தான் மக்களைக் காப்பாற்ற போராளிக் குழுக்கள் ஆயுதம் எடுத்து தமது போராட்டத்தை ஆரம்பித்தார்கள். எனினும் இப் போராட்டம் அந்நிய நாடுகளின் உதவியுடன் இலங்கை அரசால் முடிவுறுத்தப்பட்டது. அரந்தலாவையில் சிங்களப் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டமையைப் பெரிதுபடுத்தும் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது படையினர் மேற்கொண்ட துன்புறுத்தல்களைப் பெரிதுபடுத்தாமல் விடுமாயின் இலங்கையில் சமாதானம் ஏற்படுவது மிகக் கஷ்டம். இன்றுகூட தமிழ் மக்களைச் சுற்றி இராணுவ வேலியே அரசால் பின்னப்பட்டுள்ளது. எப்போது இலங்கையில் உள்ள மூவின மக்களும் அமைதியாக வாழும் சூழல் அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்படுமோ அப்போது தான் இலங்கை வளர்ச்சியடைவதோடு, தூயஒளிப் படகில் சென்றபோது படுகொலை செய்யப்பட்டவர்களது ஆன்மாக்களுக்கும் நீதியும் நிம்மதியும் கிடைக்கும். ■



### பாதுகாப்புப் படையினரை மட்டுமே கொண்ட

# ஜனாதிபதி செயலணியால் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிக்கை

**கொழும்பு, ஜூன் 10**

**பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலம்கொண்ட, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காகவென உருவாக்கப்பட்ட பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களை மட்டுமே கொண்ட ஜனாதிபதி செயலணி பொதுச்சேவையின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஆகும் என இலங்கை ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

2020ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதி வர்த்தமானி அறிவிப்பு மூலம் ஜனாதிபதியின் ஊடாக பாதுகாப்பான நாடொன்றை, ஒழுக்கநெறியுள்ள, குணநலம்கொண்ட, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றை உருவாக்குதல் என்ற தொனிப்பொருளைக் கொண்டு ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. 13 உறுப்பினர்கள் அடங்கிய இப்பணிக்குழுவில் பாதுகாப்புப் படையின் உறுப்பினர்கள் தவிர்ந்த வேறு எவ்வித சிவில் உறுப்பினர்களும் நியமிக்கப்படவில்லை.

அவர்களால் செய்யப்பட வேண்டிய பணிகளில் முதன்மையானது, தற்பொழுது நாட்டின் பல இடங்களில் சுதந்திரமாகவும், அமைதியான, சமூகநிலைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் மேலோங்கியுள்ள சட்டத்தை மீறி தவறுகள் இழைக்கும் 'சமூகக் குழுக்களின்' சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு தேவையான துரித நடவடிக்கைகளை எடுப்பதாகும். இதில் 'சமூகக் குழுக்கள்' என்ற பதத்திற்கு தெளிவான வரையறை ஒன்று வழங்கப்படாமல், இதனை அடிப்படையாகக்கொண்டு, சில சில பிரச்சினைகளுக்காக ஜனநாயக உரிமைகளுக்காக எதிர்க்கும் குழுக்களையும்கூட அர்த்தப்படுத்த முடியும். அப்படியானால் இது நாட்டின் ஜனநாயகத்திற்கு எதிரானதாகும் என்றுள்ளது. (ம)

## சுகாதார நடைமுறைகளுடன் கூட்டுறவு சபைக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைக் கூட்டங்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நடத்தப்பட்டு வருகின்றன.

அநேகமான கூட்டுறவுச் சங்கங்கள் நீண்ட நாள்களின் பின்னர் தமது இயக்குநர் சபைக் கூட்டங்களை தனிநபர் இடைவெளிகளைப் பின்பற்றி நடத்தி வருகின்றன.

சங்கங்களின் வியாபார நடவடிக்கைகள், அபிவிருத்தி மற்றும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகள் குறித்தும் இயக்குநர் சபைக் கூட்டங்கள் அவசரமாக நடத்தப்பட்டுவருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைக் கூட்டங்கள் யாவும் சுகாதார விதிகளைப் பின்பற்றியே நடத்த வேண்டும் எனவும் சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

அதேசமயம் கூட்டுறவு கிளைநிலையங்களிலும் நுகர்வோரின் வசதி கருதி சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கிளை நிலையங்களில் கைகழுவும் செயற்பாடு முக்கியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)



## வற்றாப்பளை கண்ணகி ஆலய நிர்வாகத்திடம் 'மாஸ்க்' கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினருக்கு ஒரு தொகுதி 'மாஸ்க்'கள் வழங்கப்பட்டன.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரையும் நாட்டில் ஏற்பட்டுள்ள சுகாதார நடைமுறையினைப் பேணி வழிபாட்டில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பூசை வழிபாட்டில் ஈடுபடுபவர்களுக்காக முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் 'மாஸ்க்'கள் வழங்கப்பட்டன. (ம-19)



## போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஜூன் 10

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பினால் "நாட்டுக்காக நாம் ஒன்றாய்" என்ற தேசிய விழிப்புணர்வு செயற்றிட்டம் கிளிநொச்சியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த குறித்த அமைப்பின் உறுப்பினர் ஜெனி,

தற்போது நாட்டில் உள்ள சூழலில் அனைவரும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக நாடு முழுவதும் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அரசியலில் ஈடுபடும் பெண்களை ஊக்குவிக்கவும், பெண்களை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் வகையிலும் பல்வேறு திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். தற்போது நாட்டில் பல்வேறு நெருக்கடிகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றார்.

கண்டியில் ஆரம்பித்த குறித்த செயற்றிட்டம் அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (க-6)

## 21/4 தாக்குதலுடன் தொடர்பு; திருமலையில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 10

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவருடன் தொடர்பைப் பேணினார் என்ற சந்தேகத்தில் திருகோணமலையின் ஜின்னா நகரைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான அபூ சாலி அபூபக்கர் என்பவருடன் நெருங்கிய தொடர்பை பேணிய நபரே சிறப்பு அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம)

## கடுகதி ரயில் சேவை வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கல்கிஸை மற்றும் காங்கேசன்துறைக்கு இடையிலான குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று யாழ். ரயில் நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன.



நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இருந்து புறப்பட்ட தபால் ரயில் பயணிகளுடன் நேற்றுக் காலை 8 மணியளவில் யாழ். ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான வழமையான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், பயணிகளின் வருகை மிகக் குறைவாகக் காணப்பட்டது. (க-17)

## எல்லையிடலுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

தென்மராட்சி, ஜூன் 10

தென்மராட்சி பிரதேசத்தில் சரசாலை வடக்கு தொடக்கம் கப்புது வரையான குருவிக்காடுப் பகுதிக்கு வன பரிபாலன திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டமைக்கு சரசாலைப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பெருமளவு வயல் காணிகள், குருவிகள் சரணாலயம் மற்றும் முன்னாள் ஜனாதிபதியினால் அடிக்கல் நடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட நன்னீர் தேக்கம் உள்ளிட்ட பகுதிகள் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் கையகப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி, மக்கள் போராட்டம் நடத்த முயன்றதையடுத்து இடைநிறுத்தப்பட்டது. சாவகச்சேரி பிரதேச சபை அமர்விலும் விவாதம் நடைபெற்றது. பின்னர் கொரோனாத் தொற்று காரணமாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது குறித்த பகுதியில் திணைக்களத்தினர் எல்லையிடுவதால் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (க-9)

# உணவகங்களுக்கு அறிவுறுத்தல்கள்

கொழும்பு,ஜுன் 10
உலக உணவு பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு 'பாதுகாப்பான உணவு சந்தை' என்ற தொனிப்பொருளில் அனைத்து உணவகங்களுக்கும் சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவால் விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றால் வெவ்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் அதிலிருந்து உணவு பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த அறிவுறுத்சல்கள் வழங்கப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடு நீண்ட நாள்களுக்குப் பின்னர் வழமைக்குத் திரும்பியுள்ளபோதிலும் உணவகங்களை திறப்பது தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அதற்கமைய மீண்டும் உணவகங்களைத் திறக்கும் போது எம்மால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். இவை உணவகங்களுக்கு மாத்திரமின்றி பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அவர்களால் இவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது ஆராயப்படும்.

எம்மால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களில் அனைத்து வளாகங்களின் நுழைவாயில்களில் சவர்க்காரமும் நீரும் பாவித்து கைகளை கழுவுவதற்கு போதிய வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

ஒரு தடவையில் வளாகத்தினுள் அனுமதிக்கக்கூடிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மிகவும் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் வளாக நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

வளாகத்துக்கு வெளியிலும் மற்றும் பணம் அறவீடு செய்யும் இடத்திலும் வாடிக்கையாளர்கள் வரிசையில் ஒரு மீற்றர் பாதுகாப்பு இடைவெளியைப் பேணுவதற்கு தரையில் நிலையான அடையாளம் இடப்படல் வேண்டும். இந்த அறிவிப்பு தெளிவாக வளாகத்தினுள் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

பொதி செய்யப்படாத உண்பதற்கு தயாராகவுள்ள உணவுகள் மூடி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உண்பதற்கு தயாராகவுள்ள உணவுகளை கையாள்பவர்கள் கட்டாயமாக முகக் கவசம் , கையுறை ,தலையுறை மற்றும் மேலங்கி (Apron) அணிந்திருத்தல் வேண்டும்.

உண்பதற்கு தயாராகவுள்ள உணவுகளை கையாளும் போதும் விநியோகிக்கும் போதும் சுத்தமான உபகரணங்களைப் பாவித்தல் வேண்டும்.

ஒரு முறை பரிமாறப்பட்ட உணவு மீண்டும் வேறொருவருக்கு பரிமாறவோ அல்லது விற்பனை செய்யப்படவோ கூடாது என்பனவே சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் - என்றார். (ஐ)

# பயிர்ச்செய்கை நிலங்களை இனங்காண்பதற்கு தனிக்குழு

## கிளிநொச்சியில் அமைப்பு

**கிளிநொச்சி, ஜுன் 10**
**கிளிநொச்சியில் விவசாய நிலங்களை இனங்கண்டு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு என்று தனியான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டச் செயலரால் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. விவசாயத் துறைசார் திணைக்களத் தலைவர்கள், விவசாயப் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் மேலும் இணைக்கப்பட வேண்டிய பயிர்ச்செய்கை நிலங்கள் இணங்காணப்பட்டு அவற்றை அறிக்கையிடுவதற்காகத் தனியான குழுவொன்று மாவட்டச் செயலரால் அமைக்கப்பட்டது. (ம-222)

# ஆனைவிழுந்தான் வயற்காணியை மக்களிடம் ஒப்படைக்கத் தீர்மானம்

## கரைச்சி பிரதேச சபை நிறைவேற்றியது

ஆனைவிழுந்தான் வயற்காணியை அபகரிக்க வனவளத் திணைக்களம் மேற்கொள்ளும் நடவடிக்கையைக் கண்டித்துள்ள கரைச்சி பிரதேச சபை, அந்தக் காணியை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

கரைச்சி பிரதேசசபையின் 28ஆவது அமர்வு நேற்றையதினம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது. அமர்வு ஆரம்பமானபோது மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அஞ்சலியும் இரங்கல் உரைகளும் இடம்பெற்றன.

அதன் பின்னர் கிளிநொச்சியில் தற்போது பெரும் பிரச்சினையாக இருக்கும் ஆனைவிழுந்தான் வயற்காணி தொடர்பில் பிரதேச சபையின் உறுப்பினர் செல்வநாயகத்தால் பிரேரணை முன்வைக்கப்பட்டது. குறித்த வயல் காணிகளை மக்களுக்கே வழங்கி மக்களினதும் மாவட்டத்தினதும் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் நெல் விதைத்து அறுவடைக்காக காத்திருக்கும்போது வனவளத்திணைக்களம் அதற்கு தடையாக இருக்கின்றது என்றும் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டது. பிரேரணை சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ம-6,222)

# மக்கள் கடைகள்

## வடக்கில் அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், ஜுன் 10
வடக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒவ்வொரு மக்கள் கூட்டுறவுக் கடைகளைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நவீன முறையில் மக்களைக் கவரும் வகையில் முன்மாதிரியாக கூட்டுறவு மக்கள் கடைகள் திறக்கப்படும். வடக்கு மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உதவியுடன், கூட்டுறவு மக்கள் கடைகள் ஆரம்பிக்கப்படும் என்று மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா போன்ற 5 மாவட்டங்களிலும் 47 வரையிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் முன்மாதிரியாக நவீன முறையில் பல்பொருள்களைக்கொண்டு கூட்டுறவு மக்கள் கடைகள் அமைக்கப்படவுள்ளன.

கிராம மற்றும் நகர்ப்புற மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுறவு மக்கள் கடைகளை விரைவாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-17)



# சுதந்திரபுரம் படுகொலை 22 ஆவது நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஜுன் 10
புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் உடையார்கட்டுப் பகுதியில் எறிகணை மற்றும் விமானத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 22 ஆவது நினைவேந்தல் நிகழ்வு சுதந்திரபுரம் சந்திரோஜன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

1998 ஆம் ஜுன் 10ஆம் திகதி பொதுமக்கள் மீதான வெறியாட்டத்தை இலங்கை தரைப்படைகள் மற்றும் விமானப்படையினர் நிகழ்த்தியிருந்தனர்.

இலங்கை படையினரின் இரு பிரிவினரின் கூட்டுத்தாக்குதலில் 33 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 50 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்தப் படுகொலையின் நினைவேந்தல் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அபாய நிலை காரணமாக சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறவுள்ளது.

வன்னிக்குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெறும். (க-19)

# சூறாவளியால் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கு உதவி!

தென்மராட்சி, ஜுன் 10
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற மினி சூறாவளி மற்றும் அம்பான் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் முதல் கட்ட கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

மறவன்புலோ பகுதியில் இடம்பெற்ற மினி சூறாவளியினால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கும் அம்பான் புயலால் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்த 6 குடும்பங்களுக்குமாக 16 குடும்பங்களுக்கே இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. (ம-9)

# அனுமதியின்றி சிலைகளை நிறுவினால் சட்ட நடவடிக்கை

காரைநகர் ஈழத்து சிதம்பரம் ஆலயம் அமைந்துள்ள மையத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் சுற்று வட்டத்துக்கு உருவச்சிலைகள் மற்றும் சுவாமிகளின் சிலைகளை அனுமதியற்ற முறையில் நிறுவினால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று காரைநகர் பிரதேச சபை தவிசாளர் வி. கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வரலாற்று பெருமை வாய்ந்த திருத்தலமாக காரைநகர் ஈழத்து சிதம்பரம் ஆலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்துக்கு அருகில் சட்டத்தின் முன் அனுமதி பெறப்படாத உருவச்சிலைகளுடன்கூடிய உட்கட்டுமானங்கள் பொருத்தமற்ற முறையில் இடம்பெற்றுள்ளன. இதனை உடன் அகற்றித்தருமாறு கோரி 210 க்கும் மேற்பட்ட காரைநகர் வாழ் அடியவர்கள் கையெழுத்திட்ட கடிதம் என்னிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே உள்ளூராட்சி சபை எல்லைக்குள் உருவச்சிலைகள் அமைப்பதாயின் 1975 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க 7 ஆவது பிரிவின் உருவச்சிலைகள் அமைப்பதற்கான அனுமதியை சட்டத்தின் முன் பெறவேண்டும். எனவே சட்ட அனுமதியற்று அமைக்கப்பெற்ற உருவச்சிலைகள் தொடர்பில் சம்பந்தப்பட்டோர் உடன் அதற்குரிய அனுமதியை பெற வேண்டும். இல்லையேல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (க-50)

## அமெ. இராஜதந்திரி வருகை விவகாரம் அமைச்சரவைக்கு

கொழும்பு, ஜூன் 10

அமெரிக்க இராஜதந்திரி விவகாரத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சு செயற்பட்ட விதம் குறித்து திருப்தியடையமுடியாது. இந்த விவகாரம் தொடர்பில் இன்று புதன்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் கேள்வி எழுப்புவேன்.

இவ்வாறு அமைச்சர் விமல்வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பி.சி.ஆர் பரிசோதனைக்கு உடன்படாமல் அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் நாட்டுக்குள் நுழைந்துள்ளார். இது தொடர்பில் அமெரிக்கத் தூதுவரை அழைத்து விளக்கம் கோர வேண்டும் என்பதுடன் இலங்கை அரசிடம் கடும் ஆட்சேபனையையும், எதிர்ப்பையும் வெளியிட வேண்டும்.

இராஜதந்திர சிறப்புரிமை இருக்கின்றது என்பதற்காக தொற்றுநோய் பரவும் சூழ்நிலையில் எவரும் இவ்வாறு செயற்பட முடியாது. உள்நாட்டிலுள்ள சட்டத்திட்டங்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். சீனா, இந்தியா அல்லது எந்தவொரு நாட்டின் இராஜதந்திரியாக இருந்தாலும் பொறுப்புடனேயே செயற்படவேண்டும்.

அமெரிக்காவில் தற்போது கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. எனவே, வைரஸை பரப்பும் நோக்கில் அவர் வந்தாரா என்ற சந்தேகமும் பலருக்கு எழுகின்றது.

இந்த இராஜதந்திரி விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சு செயற்பட்டுள்ள விதம் குறித்து நான் திருப்தி அடையவில்லை. எனக்கு அமைச்சரவையில் தான் கேள்வி எழுப்ப முடியும். இன்று நடைபெறும் கூட்டத்தில் இது தொடர்பில் வினா எழுப்புவேன். குறித்த சம்பவம் நடைபெற்ற பின்னர் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டமும் இதுவே-என்றார். (க-44)

# சிறந்த சேவையை மேற்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்

## போக்குவரத்து தொடர்பில் ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஜூன் 10

**மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன், தனியார் பஸ் நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தனியார் பஸ் உரிமையாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

பஸ்களின் பயண நேரசூசி தொடர்பாக இருந்துவரும் நீண்ட காலப் பிரச்சினையை விரிவாக ஆராய்ந்து தேசிய போக்குவரத்து ஆணைக் குழு, மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் போக்குவரத்து அமைச்சு ஆகியன இணைந்து பயண நேரசூசியொன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அதற்கான தகவல்களை காலம் தாழ்த்தாது ஆராய்ந்து பிரச்சினையைத் தீர்க்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாளாந்தம் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. ஒரு நாளைக்கு சுமார் 07 விபத்து இறப்புக்கள் சம்பவிக்கின்றன என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவற்றில் பெரும்பாலானவற்றுக்கு தனியார் பஸ்களே பொறுப்பு என்பதும் தெரியவந்துள்ளது. இது பற்றி கூடுதல் கவனம் செலுத்தி விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்தார். போக்குவரத்துச் சபை பஸ்களைப் போன்று தனியார் மற்றும் பாடசாலை பஸ்களுக்கும் தனியான நிறத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பயணிகள் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறை ஆரம்பமாகும் வேலை நேரங்களை திருத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

தூரப் பயணங்களை மேற்கொள்ளும் பஸ்கள் ஓய்வுக்காக நிறுத்தும் சிற்றுண்டிச்சாலைகளின் சுத்தம் பற்றியும் மிகவும் விழிப்பாக இருக்குமாறு ஜனாதிபதி தெரிவித்தார். பயணிகளின் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவமளித்து உயர் நியமங்களுடன் கூடிய பஸ்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டது என்றுள்ளது. (ப)

## சுவாச நோய் தாக்கத்தை குறைத்த முகக் கவசம்!



கொழும்பு, ஜூன் 10

முகக் கவசம் அணியும் நடவடிக்கையால் இலங்கையில் சுவாச நோய் பெருமளவு குறைவடைந்துள்ளது என்று இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கத்தின் பிரதானி கண்டி வைத்திய சங்கத்தின் தலைவர் துஷ்யந்த மெதகெதர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் முகக் கவசம் அணிந்தமையால் இந்த மாற்றம் ஏற்பட்டுளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுவாச நோய்களில் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு நோய்தன்மை பெருமளவு குறைந்துள்ளது என்றும், அதனால் நோயாளிகளுக்கு மருந்து வழங்கும் நடவடிக்கையும் பெருமளவு குறைவடைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-ரி1)



## திருவிழா ஆரம்பம்

மன்னார், ஜூன் 10

மன்னார் மறைமாவட்டத்தின் அடம்பன் பங்கைச் சார்ந்த நெடுங்கண்டல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு, நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றப்பட்டது.

அடம்பன் பங்குத் தந்தை நவரட்ணம் அடிகளார் புனித அந்தோனியாரின் கொடியை ஏற்றினார். விழாவின் ஆயத்த நாள்களை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் அருட்பணி எமிழ் எழில்ராஜ் அடிகளார் கலந்துகொண்டார். (க-60)

### உயர்தர வகுப்புக்கான

## இணைய விண்ணப்ப கால எல்லை எதிர்வரும் 12ஆம் திகதியுடன் முடிவு

கொழும்பு, ஜூன் 10

2020 உயர் தர வகுப்புக்கு அனுமதிபெற விரும்பும் மாணவர்கள் இணையத்தில் விண்ணப்பிப்பதற்கான காலஎல்லைஎதிர்வரும்12ஆம்திகதியுடன்முடிவடைகிறது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியதன் பின் கடந்த மே மாதம் 12ஆம் திகதி தொடக்கம் உயர்தர வகுப்பு அனுமதிகளுக்கான இணைய விண்ணப்பங்கள் ஆரம்பமாகியிருந்தன.

அதன்படி https://info.moe.gov.lk/ எனும் இணைய தளத்தில் பிரவேசித்து உயர்தரத்துக்கு அனுமதி பெற உத்தேசிக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்பதோடு ஒரு விண்ணப்பதாரிக்கு பத்து (10) பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டிருந்தது. (எ-ரி1)

## நீதிமன்றத்தில் முற்படுமாறு ரிஷாத் பதியுதீனுக்கு கட்டளை

பாதுகாக்கப்பட்ட வில்பத்து சரணாலயத்தின் காட்டுப் பகுதியில், காட்டை அழித்து சட்டவிரோத கட்டுமானங்கள் மற்றும் மீள் குடியேற்றத்தை முன்னெடுத்தார் எனக் கூறப்படும் விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை நீதிமன்றில் முற்படுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் மேன்முறையீட்டு நீதி மன்றில்தாக்கல் செய்த மனு தொடர்பில் விடயங்களை முன்வைக்க எதிர்வரும் 29 ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றில் முற்படுமாறு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு இந்த மீள அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான ஜனக் டி சில்வா மற்றும் நிஷங்க பந்துல கருணாரத்ன ஆகியோர் இந்த அறிவித்தலைப் பிறப்பித்தனர். (ப)

### போலிக் கையொப்ப விவகாரம்

## பிரதமர் அலுவலகத்தை சேர்ந்தவருக்கு தொடர்பு

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதியின் கையொப்பத்தை போலியாகப் பயன்படுத்தி, மீள சேவையில் இணைய முயற்சித்த விவகாரத்தில் பிரதமர் அலுவலகத்தின் சேவையாற்றும் நபர் ஒருவருக்கும் தொடர்புள்ளதாக சி.ஐ.டி. கோட்டை நீதிமன்றுக்கு அறிவித்தது.

இது தொடர்பில் தொடர்ந்தும் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் சி.ஐ.டி. நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டியது.

ஜனாதிபதியின் கையொப்பம் இடப்பட்ட போலி ஆவணங்களைத் தயாரித்து இலங்கை வங்கியில் மீளத் தனது பணியைப் பெற முயற்சித்ததாக கூறப்படும் குருணாகல், யந்தம்பலாவ பகுதியைச் சேர்ந்த பிரசன்ன அருண குமார எனும் நபர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் குறித்த வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அதன்போது சந்தேகநபர் நீதிமன்றில் முற்படாத நிலையில் மேலதிக விசாரணை அறிக்கையை சி.ஐ.டி. நீதிமன்றுக்கு சமர்ப்பித்து இவ்வாறு தெரிவித்தது. (ப)

# ஊழல், மோசடியாளர்களுக்கு முடிவுகட்டத் தயாராகுங்கள்!

## மக்களிடம் மஹிந்த கோரிக்கை

"நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஊழல், மோசடியாளர்களுக்கு நாட்டு மக்கள் முடிவுகட்ட வேண்டும். அவர்களைப் படுதோல்வியடையச் செய்ய வேண்டும். அதற்காக மக்கள் இப்போதிருந்தே தயாராக வேண்டும்."

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்களை மட்டும் வெளியிட்டால் போதாது. தேர்தல் திகதியையும் தேர்தல்கள் ஆணைக்குழு உடன் அறிவிக்க வேண்டும்.

தேர்தலைக் காலவரையறையின்றி ஒத்திவைக்க எதிரணியினர் முயற்சித்தனர். ஆனால், அந்த முயற்சிக்கு உயர்நீதிமன்றம் பதிலடி கொடுத்தது. அதேவேளை, வேட்புமனுக்களையும் மீளத் தாக்கல் செய்ய எதிரணியினர் முயற்சித்தனர். அதுவும் தோல்வியில் முடிந்தது. ஒன்றும் செய்யமுடியாத நிலையில் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை எதிரணிக்கு ஏற்பட்டுள்ளது" - என்றார். (த-22)

### 79 லட்சத்தை...

செய்யப்பட்டுள்ளார் என்ற பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரண பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய மருத்துவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் துப்பாக்கியுடன் மருத்துவமனைக்கு சென்று ஆண் உதவியாளரை தரையில் குப்புற படுக்குமாறு கூறிவிட்டு பெண் அலுவலர்களை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி மேலதிக நேரக் கொடுப்பனவுக்காக வைத்திருந்த 79 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

அது பற்றி பொலிஸுக்கு தகவல் பறந்தது. மருத்துவமனையில் சிவில் உடையில் நின்ற பொலிஸார் அவரை துரத்திச்சென்றபோது எதிரே வந்து கொண்டிருந்த பெண் பொலிஸ் அலுவலரும் இணைந்து கொள்ளையனைப் பிடித்தனர்.

அதன் பின்னரே கொள்ளையன் ஒரு மருத்துவர் என்றும் மாறுவேசமிட்டு கொள்ளையடித்தார் என்றும் தெரியவந்தது. அவர் பிறிதொரு மருத்துவமனையிலிருந்து விசேட நிபுணர் பயிற்சிக்காக இடமாற்றம் பெற்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் விசாரணையில் உள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)



## கண்ணீர் அஞ்சலி

கடந்த (09.06.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
**திரு.ச.தர்சிந்தன் அவர்களின்**
அன்புத் தந்தை

**சின்னத்துரை சந்திரதாஸ்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**

## கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில
09 . 05 . 1937



ஆண்டவன் அடியில்
08 . 06 . 2020

**குலரத்தினம் கனகம்மா**

அன்பு பாசம் என்பதற்கு சான்றாக வாழ்ந்து காட்டிய அக்கா
இதயம் தொட்டநினைவுகள் உம்மை எண்ணித் தவிக்கின்றன
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**அன்புச் சகோதரன் வே.பரமசிவம்பிள்ளையும் பிள்ளைகளும்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
09 . 06 . 1937



இறப்பு
11 . 05 . 2020

அமரர்
**அம்பலவாணர் திருஞானசம்பந்தர்**

அவர்களின் 31ஆம் நாள் கிரியைகள் இன்று (10.06.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஏழாலை தெற்கு,**
**சுன்னாகம்.**
**குடும்பத்தினர்.**


### கடற்படையை...

யால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் விசாரணையில் உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படையினர் தலையிட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாகவே நேற்று மாலை மோட்டார் சைக்கிளில்சென்ற இரு கடற்படைச் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையால் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு கடற்படையினர் நேற்று அனுமதி மறுத்துள்ளனர் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம், தாக்குதலில் காயமடைந்த கடற்படைச் சிப்பாய்கள் அங்கு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105,26)

### 196...

22 தேர்தல் மாவட்டங்களுக்கும் அரசியல் கட்சிகளினூடாக 3 ஆயிரத்து 652 வேட்பாளர்களும் சுயேச்சைக் குழுக்களில் 3 ஆயிரத்து 800 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

திகாமடுல்ல மாவட்டத்திலேயே அதிகளவாக 20 அரசியல் கட்சிகளும் 34 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலேயே ஆயிரத்து 173 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு வாக்கெடுப்பு ஊடாக 196 பேர் தெரிவாக 29 பேர் தேசியப்பட்டியல் ஊடாக தெரிவுசெய்யப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-44)

### கலசம்...

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கோவிலை உடைத்து திருட்டில் ஈடுபட்டவர்களை சி.சி.ரி.வி. காணொலி மூலம் இனங்காண முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

### கூட்டமைப்பின்...

தில் ஈடுபடவில்லை என்பது எமது அன்புக்குரிய தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். எனவே, அரசியல் தீர்வை வென்றெடுக்க எமது கரங்களைப் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் மென்மேலும் பலப்படுத்த வேண்டும்."

இவ்வாறு வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொரோனா வைரஸ் என்ற கொடிய நோய்த் தாக்கத்துக்கு மத்தியில் மிகவும் கஷ்டமான நிலைமையில் நாடாளுமன்றத் தேர்தலை நாம் எதிர்கொள்ளவுள்ளோம். இந்தக் காலப்பகுதியில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி தேர்தல் நடைபெற்றால் அதில் நாம் அனைவரும் பங்கேற்பது பிரதான கடமையாகும்.

எம்மிடம் இருக்கும் வாக்குரிமையை நாம் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். இந்தக் கடமையை எமது தமிழ் மக்கள் கடந்த காலங்களிலிருந்து தவறாது செய்து வருகின்றார்கள்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் என்பதை எமது மக்கள் கடந்த தேர்தல்களில் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். இந்தமுறையும் எமது மக்கள் அவ்வாறு செயற்படுவார்கள். அதில் எமக்கு நூறு வீதம் நம்பிக்கை உண்டு. எனினும், இந்தத் தடவை எமது கரங்களைத் எமது மக்கள் மென்மேலும் பலப்படுத்த வேண்டும்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வென்றெடுக்க நாம் ஓயாது பயணித்துக்கொண்டிருக்கின்றோம்.

வடக்கு கிழக்கில் அதிக ஆசனங்களை இந்தமுறை நாம் கைப்பற்ற வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றத்தில் பலம் பொருந்திய பேரம் பேசும் சக்தியாக நாம் திகழ முடியும். தமிழர்களின் உரிமைகளை அரசிடம் தட்டிக் கேட்க முடியும்" - என்றார். (த-22)

### 13 பேரின்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் அதிகமாக பழகிய 13 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்காக நேற்று எடுக்கப்பட்டுள்ளன. அதன் பெறுபேறுகள் நாளை (இன்று) கிடைக்கப்பெற்றதும் இறுதி முடிவு தெரியவரும். அதேநேரம் குறித்த இந்தியப் பிரஜை ஏழாலைப் பகுதியில் மேலும் நான்கு வீடுகளிற்கு புடவை விற்பனை நிமித்தம் சென்றுவந்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் ஏற்கனவே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட 3 குடும்பங்களுடன் தற்போது மேலும் நான்கு குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்தார். (த,ஒ,5,105)

## நாஹா மருத்துவ நிலையம்

தீவிர எலும்பு பாதிப்புற்றிருக்கும் வாதம், முழங்கால்வாதம், கை, கால், செயழிலப்பு, மாறாதபுண்கள், அல்சர், பித்தப்பைகல், பெண்ணியல் நோய், விசேட சிறப்பு சிகிச்சை.

வங்கி முன்லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மாவிட்டபுரம்.

077 321 2740

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப் பெண் தேவை.

தொடர்பு: 077 410 2724

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள அந்திய கால சேவை கடைக்கு மலர் வளையங்களுக்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு:-076 584 6523

## மாபிள் வேலை

உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி 45/=.

தொடர்புகளுக்கு: 077 334 1281

## வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ் நகரில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி யிருந்து வேலை செய்ய பெண் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 187 1821

## விற்பனைக்கு

மிளகு கன்று, கொழும்பு வெற்றிலை மற்றும் பல இனக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-077 612 9343
நியுலங்கா பாம்
பலாலி றோட். ஊரெழு மேற்கு
கணேசா பாடசாலைக்கு அருகாமை

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

Congratulation



எமது தீவக கல்வி வலயத்தில் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி மணிவிழா காணும் நாயகன்

**புவிராஜா ஸ்ரீஸ்கந்தராஜா**

எமது தீவக கல்வி வலயத்தில் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராக 01.01.2008 - 10.06.2020 வரை சிறப்புடனும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்றி 10.06.2020 அன்று சேவையிலிருந்து ஓய்வுபெறுவதையிட்டு அவரை பாராட்டுவதுடன் அவரின் ஓய்வு காலம் மேலும் சிறப்புடன் அமைய இறையாசியை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
விஞ்ஞான ஆசிரியர்கள்
தீவகக் கல்வி வலயம்

## VACANCY ANNOUNCEMENTS

THE HALO TRUST

The HALO Trust is a non-political and non-religious registered British charity which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Kilinochchi, Jaffna, and Colombo.

HALO is seeking hard working candidates for two vacancies as listed below. **All applications must be submitted no later than Wednesday 17th June 2020.** Only successful candidates will be contacted. For further infor mation on any of the roles advertised, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply, particularly female candidates for all roles.

### HR MANAGER, KILINOCHCHI

Based at HALO's Kilinochchi office, the Human Resources (HR) Manager will provide HR and administrative oversight to our busy administrative team. Responsibilities will include: dealing with staffing issues in cooperation with the Office Manager, assisting with the organisation and recording of staff recruitment, and other requirements as needed to support all personnel and administrative functions of the office.

**Essential:** good command of English, excellent working knowledge of Microsoft Office (especially Word and Excel), excellent organisational skills, minimum 5 years' work experience.

**Desirable:** minimum 3 years' experience working in a similar HR role.

Candidates who do not have at least 5 years' work experience should not apply. Interested candidates should submit their CV and a letter explaining their suitability for the post **in English** to: **hr@halosrilanka.org** or to The HALO Trust, 450 Thirunagar West Road, Kilinochchi.

### DATA ENTRY OFFICER, KILINOCHCHI

Based at HALO's Kilinochchi office, the Data Entry Officer will provide support to our busy logistics team with demining equipment and fleet stores. Responsibilities will include: populating a database with information regarding purchases and stock, maintaining files relating to purchasing and stock control, issuing items from the stores, providing reports as requested by senior management.

**Essential:** good command of English, excellent working knowledge of Microsoft Office (especially Excel and Access), excellent organizational skills, minimum 2 years' work experience.

**Desirable:** 2 years' experience working in a similar data entry role.

**Interested candidates should submit their CV and a letter explaining their suitability for the post in English to: hr@halosrilanka.org or to The HALO Trust, 450 Thirunagar West Road, Kilinochchi.**

## பெயர் மாற்றம்

புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த **யமலன்ஸ்** ஆகிய நான் இன்றிலிருந்து **யமணன்** என்று பெயர்மாற்றம் செய்வதோடு இன்றுமுதல் இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகிறேன்.

**யமணன்**

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு $O^+$ இரத்தவகை சேர்ந்த வரின் சிறுநீரகம் தேவை. 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

077 630 7106, 077 814 1621

## அச்சக சேவை
## Printing Service

எம்மிடம் A4 அளவில் இருந்து A0 அளவு வரையிலான கலர் மற்றும் கறுப்பு வெள்ளை படங்கள், வரைபடங்கள் போன்றவற்றை தேவையான நீள அளவுகளில் அச்சுப் பதிப்பு (Printing) செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**அலுவலக நேரம்:**
தினமும் : 8am - 4.30 pm
சனிக்கிழமை : 8am - 12.30 pm

தொடர்பு: **ரூலின்ஸ் பிறைவேட் லிமிட்டெட்**
இல.08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் மாநகர சபை முன் வீதி)
**தொலைபேசி இல:**
021 222 5534, 077 978 8700

## விண்ணக வாழ்வில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 03 . 1954



இறப்பு 10 . 06 . 2019

**அமரர் ஞானம் -ஞானசேகரம்**
**(சிவலிங்கம்-பிரபல ஆசாரி)**

"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம். இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்."

கருணைத் தெய்வமே!

இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு உம்மிடம் வந்த எம் அன்புத் தந்தைக்காக உம்மிடம் வேண்டுகின்றோம். இவ்வுலகில் இவர் செய்த அனைத்துப் பாவங்களையும் மன்னித்து உம் வான் வீட்டில் சேர்த்தருளுமாறு மன்றாடுகின்றோம்.

ஆமென்

மாதா கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி.

குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06.11.1975
இறப்பு 19.04.2016



**சண்முகராசா-சுதர்மன்**
**(சுதன்)**

பிறப்பு 28.02.1978
இறப்பு 27.05.2016




**சண்முகராசா-துவாரகா**
**(சூட்டி)**

பண்பும் பாசமும் நிறைந்தவர்களாய்
எம்மோடு வாழ்ந்த எம் குடும்ப விளக்குகளே
இன்று உம்மை இழந்து நாம் தவிக்கின்றோம்.
நான்கு ஆண்டுகள் கடந்து சென்றாலும்
உம் நினைவுகளை எம்மால் மறக்க முடியாது.

ஏழாலை கிழக்கு, ஏழாலை.

என்றும் பாசமுள்ள
குடும்பத்தினர்.

# கொரோனா 1,858 நேற்று ஒருவர்

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இதன்படி கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,858 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 67 பேர் குணமடைந்துள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,057 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 790 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் மருத்துவமனைகளில் 74 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (த-22)

## மரண அறிவித்தல்



### திருமதி குலரத்தினம் கனகம்மா

யாழ். காரைநகர் களபூமி பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், களபூமி பாலாவோடையை வசிப்பிடமாகவும், பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட குலரத்தினம் கனகம்மா கடந்த (08.06.2020) திங்கட்கிழமை பிரித்தானியாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற க.வி. குலரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், பிரித்தானியாவைச் சேர்ந்தவர்களான சதானந்த லிங்கம், சர்வானந்தலிங்கம், பரராசலிங்கம், தேவநாயகி, குலதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்கினேஸ்வரன், தவராசா, சத்தியபாமா, தவயோகேஸ்வரி, கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், மாலதி, திவ்யா, சத்யா, கனகா, மேனகா, லிங்கா, குலம், சாய்ஸ்வரி, சாயிருபினி, சாயினி, சிவகுமார், சிவசக்தி, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.532, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா ஐயாத்துரை

கிராம்புவில் சாவகச்சேரி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா ஐயாத்துரை நேற்று (09.06.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-பொன்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர், முல்லைத்தீவு), அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர்), சரவணமுத்து, இராசம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசபை, நாகம்மா, அன்னம்மா, ராசம்மா, சரஸ்வதி, சுந்தரம் ஆகியோரின் அன்புமைத்துனியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, மதியம் 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிபிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிராம்புவில்,
சாவகச்சேரி வடக்கு.

தகவல் :
ப.சிவதாசன்
077 1707 240

## மரண அறிவித்தல்



தோற்றம்: 23.02.1928 மறைவு: 09.06.2020

### திருமதி ஐயாத்துரை தங்கம்மா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை தங்கம்மா நேற்று (09.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2020) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் தீத்தங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல் : குடும்பத்தினர்
+447886654158
0775170099

## மரண அறிவித்தல்

மண்ணில் • 08 • 03 • 1966



விண்ணில் • 09 • 06 • 2020

### திருமதி லதாமினி சுந்தரநாதன்

யாழ் அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.லதாமினி சுந்தரநாதன், நேற்று (09.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி.திருச்செல்வம் பூமணியின் அன்பு மகளும், திரு.சுந்தரநாதனின் அன்பு மனைவியும், திருமதி.பைரவி, செல்வன் பவித்ரன் அவர்களின் பாசமிகு தாயாரும் திரு.சுதா கரனின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பாடசாலை வீதி அச்சுவேலி தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்

## சகல...

கட்டங்களின் கீழ் கல்வி நடவடிக்கை
ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சர்
டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக
வியலாளர் சந்திப்பில் அவர் இதைத்
தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜூன் மாதம் 29 ஆம் திகதியுடன் பாட
சாலை விடுமுறை நிறைவடைகின்றது.
அதன் பின்னர் நான்கு கட்டங்களின் கீழ்
கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

முதற்கட்டமாக ஜூன் 29ஆம் திகதி அதி
பர், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை நிர்
வாகத்தினர் சமூகமளிக்க வேண்டும்.
அன்றைய தினம் மாணவர்கள் வர
வேண்டியதில்லை.

இரண்டாம் கட்டமாக ஜூலை 6ஆம் திகதி
தரம் 5, 11 மற்றும் 13 ஆம் ஆண்டு மாண
வர்களுக்கான கல்வி நடவடிக்கை ஆரம்
பமாகும்.

ஜூலை 20ஆம் திகதி முதல் மூன்றாம்
கட்ட நடவடிக்கை ஆரம்பமாகும். 10, 12
ஆம் ஆண்டுகளில் கல்வி பயிலும்
மாணவர்கள் அன்று பாடசாலைக்கு
வருகை தரமுடியும்.

ஜூலை 27 ஆம் திகதி நான்காம் கட்டமாக
3,4,6,7,8 மற்றும் 9 ஆம் ஆண்டு
மாணவர்களை பாடசாலைக்கு அழைப்
பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நேரமாற்றம்**

3, 4 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு
காலை 7.30 மணி தொடக்கம் முற்பகல்
11.30 மணிவரையும், 5 ஆம் ஆண்டு
மாணவர்களுக்கு காலை 7.30 மணி
தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும்,
6,7,8,9 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு
காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல்
1,30 மணிவரையும், 10,11,12,13 ஆம்
ஆண்டு மாணவர்களுக்கு காலை 7.30
மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை
கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும்.

**பரீட்சைகள்**

அதேவேளை, உயர் தரப்பரீட்சை செப்
ரெம்பர் 7 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 2
ஆம் திகதி வரை நடைபெறும். 5 ஆம்
ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்
பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 13 ஆம் திகதி
இடம்பெறும், என்றும் அவர் கூறினார்.
(த-ஒ,5,44)

## கோத்தாவின்...

தாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்
துள்ளது.

இந்தச் செயலணியில் சிறுபான்மையி
னத்தவர்கள் இடம்பெறாதது மிகவும் சிக்
கலான விடயம் என்றும் சர்வதேச மன்
னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. மதச் சுதந்திரம் மற்றும் நம்பிக்கை
தொடர்பான விசேட அறிக்கையாளருக்கு
சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே சர்
வதேச மன்னிப்புச் சபை இதனைத் தெரி
வித்துள்ளது.

அது மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"கடந்த மே மாதம் பௌத்த ஆலோசனை
சபையின் இரண்டாவது கூட்டத்தில்
கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள்
முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை
ஆராய்வதற்கும் அவை அழிக்கப்படுகின்
றன என வெளியான கரிசனை காரண
மாக அவற்றைப் பாதுகாப்பதற்குமான
நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாது
காப்பு அமைச்சின் செயலாளர் கமால்
குணரட்ண தலைமையில் செயலணி
யொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.
இலங்கையில் பௌத்த, இந்து, இஸ்லா
மிய, கிறிஸ்தவ தொல்லியல் பகுதிகள்
தொடர்பாக வெளியாகி வரும் கரிசனை
களைக் கருத்திற்கொள்ளும்போது ஓய்வு
பெற்ற இராணுவ அதிகாரிகள் தலைமை
யிலான ஜனாதிபதி செயலணி உள்நாட்
டுப் போரின் ஆரம்பத்துக்கு காரணமாக
இருந்த இந்த அரசியல் மயமாக்கப்பட்ட
இன ரீதியான விவகாரத்தை மேலும் தீவி
ரப்படுத்தலாம்.

ஜனாதிபதி இலங்கையின் தெரண நிறுவ
னத்தின் தலைவர் உட்பட 11 பேர் அடங்
கிய செயலணியை நியமித்துள்ளார்.

தெரண என்ற வலதுசாரி ஊடக நிறுவ
னம் சிங்கள பௌத்த உள்ளடக்கங்
களை முன்னிறுத்துவது வழமை. இந்தச்
செயலணியில் சிறுபான்மையினத்த
வர்கள் இடம்பெறாதது மிகவும் சிக்க
லான விடயம் .

ஊடக அறிக்கைகளும், விமர்சகர்களும்
சிங்கள பௌத்த தேசிய நிகழ்ச்சி நிரலை
முன்னெடுப்பதற்கு இந்த ஜனாதிபதி
செயலணி பயன்படுத்தப்படும் என அச்
சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனா வைரஸின்
பிடியில் உலகம் சிக்கியுள்ள தருணத்தில்
முஸ்லிம் சமூகத்தினரையும் இலக்கு
வைத்து இலங்கை அரசு செயற்படுகின்
றது" என்றும் குற்றம்சாட்டியுள்ளது. (த-22)

## நாடாளுமன்ற...

களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.
மாத்தறை மாவட்டத்திலுள்ள தமது ஆத
ரவாளர்களுடன் நடைபெற்ற கலந்துரை
யாடலின் பின்னரே அவர் இந்த முடிவை
அறிவித்தார்.

அத்துடன், பொதுத்தேர்தலில் போட்டியி
டுவதிலிருந்து விலகுவது தொடர்பான
தனது முடிவை ஐக்கிய தேசியக் கட்சியின்
தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும்,
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்
பிரேமதாசவுக்கும் மங்கள சமரவீர கடி
தம் மூலம் அறிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடை
பெறும் என்று எதிர்பார்க்கப்படும் பொதுத்
தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்
பில் மாத்தறை மாவட்டத்தில் மங்கள
சமரவீர போட்டியிடவிருந்தார் என்பது
குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஜனாதிபதி கோத்தாபய
ராஜபக் ஷவிடம் தூரநோக்குடைய சிந்
தனை இல்லை எனவும் அவர் விமர்சித்
துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி இரு
அணிகளாக பிளவுபட்டுள்ளமை குறித்
தும் அவர் கவலையை வெளிப்படுத்தி
யுள்ளார்.

நாடாளுமன்ற அரசியலிலிருந்து ஓய்வு
பெற்றாலும், செயற்பாட்டு அரசியலில்
இருப்பேன் எனவும், அதற்கு மாத்தறை
மக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும்
அவர் கோரினார். (ஒ,5,44)

## நேற்றும்...

தவிர, அகழ்வு பணி நேற்றுடன் முடிவு
றுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்
கப்பட்டது.

கிளிநொச்சி முகமாலை பகுதியில் கண்
ணிவெடி அகற்றும் செயற்பாடு இடம்
பெற்றுவரும் பகுதியில் எலும்புக் கூடுகள்
அடையாளம் காணப்பட்டிருந்தன.

இவை பற்றி கண்ணிவெடி அகற்றும்
நிறுவன பணியாளர்கள் பொலிஸாருக்கு
வழங்கிய தகவல் நீதிமன்றத்துக்கு
கொண்டுசெல்லப்பட்டு அகழ்வு நடை
பெற்றது.

கடந்த 26 ஆம் திகதி அகழ்வின்போது
எலும்புக்கூடு,3 துப்பாக்கிகள், ரவைகள்,
மகசின்கள், தகட்டு இலக்கம், கைக்
குண்டு, விடுதலைப் புலிகளின் சீருடை
கள் போன்றன மீட்கப்பட்டிருந்தன.

கடந்த 2 ஆம் திகதி அகழ்வின்போது ஒரு
பெண்ணின் எலும்புக்கூடு மீட்கப்பட்டி
ருந்தது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான், சட்ட மருத்
துவ அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட மூத்த
பொலிஸ் அத்தியட்சகர், பளை பொலிஸ்
நிலைய பொறுப்பதிகாரி, கண்ணிவெடி
அகற்றும் நிறுவத்தின் நடவடிக்கை முகா
மையாளர் ஆகியோர் உட்பட பலர் முன்
னிலையில் நேற்று அகழ்வு நடைபெற்
றது. (த-6)

## சம்பந்தன்...

கம் என்று வடக்கு மாகாண சபையின்
முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவ
ராசா சாடியுள்ளார்.

9 மாகாணங்களும் மக்கள் பிரதிநிதிகள்
இல்லாது ஆளுநர்களின் ஆட்சியில்
இருப்பதற்கு முக்கிய காரணி தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பே என்றும் அவர்
தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்
துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடை
பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்
மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்
றும் அவருடைய குடும்பத்தினரை கடு
மையாக விமர்சித்து வந்தவர்கள் தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பினரே. அண்மை
யில் மகிந்த ராஜபக் ஷவை மக்களின்
நாயகன் என பல வார்த்தைகளை
தொட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
தலைவர் இரா.சம்பந்தன் புகழாரம் சூட்டி
யுள்ளார்.

கூட்டமைப்பின் தலைவரின் புகழாரம்
ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இது
வரை காலமும் மகிந்த அரசை கடுமை
யாக விமர்சித்தவர்கள் தமிழீழ விடுத
லைப் புலிகளுக்கு எதிரான போரைக்
கையாண்ட முறைமை தொடர்பில் பல
விமர்சனங்களை முன்வைத்தனர்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில்கூட ராஜபக்
ஷ குடும்பத்தினரை கடுமையாக தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட
அவருடைய கட்சியினர் விமர்சித்தனர்.
சம்பந்தனின் திடீர் புகழாரம் அரசியல்
கபட நாடகமே என்று தவராசா தெரிவித்
தார்.

இதேவேளை,

வடக்கில் போதைப் பொருளைக் கட்டுப்ப
டுத்த சகல படைத் தரப்பினரையும் ஒன்
றிணைத்து விரைவான செய்பாட்டை
முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்
கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள்
போதைப் பொருள் பாவனைக்கு அடிமை
யாகி வருகின்றார்கள். போதைப்பொருள்
வியாபாரத்தை இராணுவத்தினரால் கட்
டுப்படுத்த முடியும்.

இது இளைஞர் சமுதாயத்தைக் காப்பாற்
றுவதற்கான போராட்டம். அதைவிடுத்து
வேறு எங்கு இராணுவ ஆட்சி உள்ள
தென்பது தெரியவில்லை- என்றார்.
(த-20,106)

## விடுதலைப்...

இவ்வாறு முன்னாள் போராளிகளிடம்
வலியுறுத்திக் கோரியுள்ளார், தமிழ் அர
சுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசி
யக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளு
மன்ற உறுப்பினருமான மாவை.
சோ.சேனாதிராசா.

மறுவாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலி
கள் கட்சிக்கும் தமிழ் அரசுக் கட்சியின்
தலைவர் சேனாதிராசாவுக்கும் இடையில்
வவுனியாவில் கலந்துரையாடல் ஒன்று
நேற்று நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து
தெரிவித்தபோதே சேனாதிராசா இவ்
வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாங்கள் கடந்த காலங்களில் வறுமையி
லும், தற்போது எதிர்காலமற்ற நிலையி
லும் இருப்பதுடன், கூட்டமைப்பு தங்க
ளுக்கு உதவவில்லை என்ற கருத்தை
அவர்கள் முன்வைத்திருந்தனர். எதிர்
காலத்திலாவது கூட்டமைப்பு தங்களுக்கு
உதவவேண்டும் என்று அவர்கள்
கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

மக்களுடைய வாக்குகள் பிளவுபடாமல்
கூட்டமைப்பை பலப்படுத்துவதற்காக,
வருகின்ற தேர்தலில் ஆதரவு வழங்குவ
தாக அவர்கள் எமக்கு கூறியிருக்கின்றார்
கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான நாம்
ஒவ்வொரு தேர்தல்களிலும் முன்வைத்த
கோரிக்கைளின் அடிப்படையில் செயற்
பட்டு வந்திருக்கின்றோம். அந்தத் தேர்
தல் அறிக்கைகளின் அடிப்படையில்
தமிழ்மக்கள் எம்மை தமது பிரதிநிதிகளாக
அங்கீகரித்து வந்திருக்கின்றனர். நாம்
இதுவரை செய்த விடயங்களையும்
அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக
வும் எமது தேர்தல் அறிக்கையில் தெரி
விப்போம்.

கடந்த ஆட்சியில்கூட புதிய அரசமைப்
பின் மூலம் தமிழ் மக்களின் இனப்பிரச்
சினைக்கு தீர்வு வழங்கப்படவேண்டும்
என்பது தொடக்கம் போரால் பாதிக்கப்
பட்ட எமது பகுதிகளை பொருளாதார
ரீதியாக மீள கட்டிஎழுப்பவேண்டும் என்ப
தற்காக பல நடவடிக்கைகளை எடுத்தி
ருந்தோம். அதில் ஓரளவுக்கு முன்னேற்
றம் ஏற்பட்டிருந்தது. இந்த நெருக்கடி
யான காலப்பகுதிகளிலும் எமது மக்க
ளின் உரிமைகளை முன்னிறுத்தி, எதிர்
கால அரசியலை தீர்மானிப்பதில் பல
புதிய அணுகுமுறைகளைக் கடைப்பி
டித்து வருகின்றோம். அதனை மக்க
ளுக்கு நாம் அறிவிப்போம்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருந்
தது என்பதைப்பற்றி குறிப்பிட விரும்பாத
மனநிலையில் புதிய ஜனாதிபதி இருக்கும்
நிலையிலும், அவர்களோடும் நாம் பேச
வேண்டிய தந்திரோபாயங்கள் தொடர்
பாக ஆராய்ந்து வருகின்றோம். தேர்தல்
முடிந்த பின்னர் ஏனைய புலம்பெயர்
அமைப்புகளோடும் கட்சிகளோடும்
அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக தீர்
மானங்களை எடுப்போம் என்றார்.

இறுதியில் மறுவாழ்வளிக்கப்பட்ட போரா
ளிகள் என்ற கட்சியின் பெயரில் என்னி
டம் ஒரு கோரிக்கையை முன்வைத்தி
ருந்தனர். அப்படி ஒரு கட்சியோடு பேச
வேண்டும் என்ற கோரிக்கை என்னிடம்
விடுக்கப்படவில்லை. போராளிகள் தரப்
பில் பேசப்போவதாகவே எனக்கு தெரி
வித்திருந்தார்கள். எதிர்காலத்தில் போரா
ளிகள் எங்களோடு இணைந்து செயற்ப
டவேண்டும் என்ற வகையில் பேசுவதற்கு
விருப்பம் தெரிவித்திருந்தேன். எனவே
இந்தச் சந்திப்பானது போராளிகள் என்ற
வகையில்தான் இடம்பெற்றது.


கட்சி சார்பாக அவர்கள் தந்திருக்கும்
கோரிக்கை தொடர்பாக தமிழ் அரசுக் கட்
சியிடத்திலும், கூட்டமைப்பின் தலைவர்
களோடும் பேசிய பின்னர்தான் பதில்
தரமுடியும் என்று அவர்களிடம் சொல்லி
யிருக்கின்றேன் என்று சேனாதிராசா
மேலும் தெரிவித்தார்.

சந்திப்பில் மறுவாழ்வளிக்கப்பட்ட விடுத
லைப் புலிகள் கட்சியின் தலைவர் க.
இன்பராசா, வடக்கு மாகாண சபையின்
முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம்
ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-110)

## விருப்பு...

இலக்கங்களை தேர்தல்கள் ஆணைக்
குழு முடிவுசெய்திருந்தது. அந்த இலக்
கங்களே நேற்று வர்த்தமானியில் வெளி
யிடப்பட்டுள்ளன. (ஒ,5)

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் அப்பாசிக்கு கொரோனா



இஸ்லாமபாத், ஜுன் 10
பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் மொகமட் அப்பாசிக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று அவதானிக்கப்பட்டதை அடுத்து அப்பாசி தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவர் தீவிர மருத்துவ கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார். (ம)

# சமூக விலகல் தேவையில்லை

## கொரோனாவை வென்ற நியூசிலாந்து அறிவிப்பு



வெலிங்டன், ஜூன் 10
கொரோனாவைக் கட்டுக்குள் முழுவதுமாகக் கொண்டுவந்துவிட்டோம். இனி சமூக விலகல் தேவையற்றது. மக்கள் முழுச் சுதந்திரத்துடன் தங்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பலாம் என்று அறிவித்துள்ளது நியூசிலாந்து அரசு.

இது தொடர்பில் நியூசிலாந்து அரசு விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:
நியூசிலாந்தில் இப்போது எந்த கொரோனா நோயாளியும் இல்லை. கொரோனா இல்லாத நாடாக நியூசிலாந்து அறிவிக்கப்படுகிறது. நியூசிலாந்து இப்போது பாதுகாப்பாக, வலிமையான நிலையில் இருக்கிறது. கொரோனாவுக்கு முந்தைய வாழ்க்கைப் பாதைக்கு செல்வது இனிமேல் எளிதானது. மக்கள் சமூக விலகலைக் கடைபிடிக்கத் தேவையில்லை, எத்தனை பேர் வேண்டுமானாலும் கூட்டங்களில் சேரவும், ஒன்றாகச் சுற்றவும் தடையில்லை.
ஆனால், நாட்டின் எல்லைகள் மூடப்பட்டுள்ளமையால், வெளிநாட்டினர் நியூசிலாந்துக்குள் வருவதற்குத் தடை நீடிக்கிறது - என்றுள்ளது. (ம)

# வெள்ளை மாளிகைக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு

வொஷிங்டன், ஜுன் 10
கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் என்பவரின் இறப்புக்கு நீதிகோரி இடம்பெற்ற போராட்டங்கள் கலவரங்களாக மாறியதை அடுத்து, வெள்ளை மாளிகைக்கு உச்சக்கட்டப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.
அமெரிக்கப் பொலிஸார் ஒருவர் ஜோர்ஜ் புளொய்ட் என்பவரின் கழுத்தில் தனது முழங்காலால் 9 நிமிடங்களுக்கும் மேலாக அழுத்திப் பிடிக்கின்றார். அதன் பின்னர் ஜோர்ஜ் புளொய்ட் உயிரிழந்தார். இதையடுத்து கறுப்பினத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்தும், ஜோர்ஜ் புளொய்ட்டின் இறப்புக்கு நீதிகேட்டும் அமெரிக்காவில் பரவலாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வெள்ளை மாளிகைக்குள் நுழைவதை போராட்டக்காரர்கள் இலக்காகவும் கொண்டுள்ளனர். இதையடுத்தே வெள்ளை மாளிகைக்குப் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (ம)

மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ பட்டதாரி 1984 பிறந்த ஆசிரிய மணமகனிற்கு அரச பதவியில் உள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
நட்சத்திரம் உத்திரட்டாதி, கிரகபாவம் 17
தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.
077 271 9555, 077 802 6271

வீடு வாடகைக்கு உண்டு
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 5044 814, 071 0639 199

நாகபூஷணி திருமண சேவை
பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்
(10.06.2020 தொடக்கம் 12.06.2020 வரை)
டாக்ரர், இஞ்சினியர், எக்கௌண்டன், அரச உத்தியோகத்தர், ஆசிரியர், சட்டத்தரணிகள், தனியார் துறையினர் மற்றும் வியாபாரிகள் ஜாதகங்கள் ஏராளமாக உள்ளன.
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதங்கள் உடன் மிகப் பொருத்தமாகத் தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்.மாவட்டம்
ஐக்கிய மக்கள் சக்தி
மக்களின் வேண்டுகோளுக்கு
இணங்க,
காலத்தின் தேவை கருதி,
சமூக சேவையை
மேம்படுத்த,
கௌரவ
சஜித் பிரேமதாச
அவர்களுடன்
வெற்றியை நோக்கி....


அ. கிருபாகரன்
கிருபா லேணர்ஸ்
2 X

# கொரோனா பலி 410,000

வுகான், ஜுன் 10
கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 10 ஆயிரமாக அதிகரித்துள்ளது.
சீனாவின் வுகானில் டிசெம்பர் இறுதியில் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளில் பரவியுள்ளது. ஆரம்பத்தில் சீனாவையும் பின்னர் ஐரோப்பிய நாடுகளையும், அதன் பின்னர் அமெரிக்காவையும் கதிகலங்க வைத்த கொரோனா தற்போது தென் அமெரிக்க நாடுகளில் ஆழமாக வேரூன்றியுள்ளது. பிரேசில், பெரு உள்ளிட்ட தென்னமெரிக்க நாடுகளில் தற்போது கொரோனாவின் தாக்கம் அதி தீவிரமாக உள்ளது. இந்த நிலையில் நேற்று நள்ளிரவு வரையிலான நிலைவரத்தின்படி 4 லட்சத்து 10 ஆயிரம் பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம)



ஜோர்ஜ் புளொய்ட்டின் படுகொலைக்கு நீதிகேட்டு அமெரிக்கா எங்கும் போராட்டங்கள் தீவிரமாகியுள்ளன. அங்குள்ள சுவர்ப் பகுதிகளில் பொலிஸாரின் அத்துமீறலைக் கண்டித்து சுவரோவியங்களும் வரையப்பட்டுள்ளன. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புளொய்ட்டின் கழுத்தை நெரிப்பது போன்று இந்தப் படம் வரையப்பட்டுள்ளது. (ம)



# பாதுகாப்புடன் போராடுங்கள்

## அமெரிக்க மக்களுக்கு அதானம் எச்சரிக்கை!

வொஷிங்டன், ஜுன் 10
அமெரிக்காவில் கொரோனாத் தொற்று ஆபத்தான கட்டத்தில் உள்ளது. இந்த நிலையில் அந்த நாட்டு மக்கள் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றமை ஆபத்தானது. உரிய நடைமுறைகளைப் பின்பற்றி மக்கள் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் உலக சுகாதார அமைப்பின் தலைவர் அதானம்.
இது தொடர்பில் அதானம் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா வைரஸின் தாக்கம் உலகளவில் மிக மோசமாகி வருகிறது. அமெரிக்காவில் கொரோனா வைரஸின் பாதிப்பு குறையாதபோது மக்கள் போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொள்கின்றமை நிலைமையை மேலும் விபரீதமாக்கும்.
இனரீதியிலான வேறுபாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கிறது. அதேசமயம், சமூக விலகலுடன் போராட்டங்களில் ஈடுபட வேண்டும். கைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள், முகக்கவசம் அணிந்து போராட்டங்களில் ஈடுபடுங்கள். உடல்நல பாதிப்பு லேசாக இருந்தாலும் போராட்டங்கள், கூட்டங்களில் பங்கேற்காமல் தனித்திருங்கள்- என்றார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.